தடுப்பாட்டம்

கிரிக்கெட்டும் கிரிக்கெட் சார்ந்தும்

கிரிக்கெட் தமிழ் மாத இதழ்

பிப்ரவரி - 2025

கொங்காழி த்ரிஷா

U19

பெண்கள் உலகக் கோப்பை

307 ரன்கள்

01 சதம்

07 விக்கெட்டுகள்

துடுப்பாட்டம் மாத இதழ்

பிப்ரவரி 2025

இன்னிங்ஸ் 2 **ஓவர் 2**

வடிவமைப்புக் குழு

S. பழனி செல்வகுமார் ***கா. இராமச்சந்திரன்***

கார்த்திகேயன் ***ஞா. மைக்கேல்ராஜ்***

வணக்கம், அன்புடையீர்!

இளையோர் மகளிர் உலகக் கோப்பை வென்றுள்ள இந்திய அணிக்கு எமது பாராட்டுகள். துவக்க வீரர் கொங்கடி த்ரிஷா மற்றும் பந்து வீச்சாளர் வைஷ்ணவி சர்மாவுக்கு சிறப்புப் பாராட்டுகள்.

இந்திய அணி சிட்னி டெஸ்ட் தோல்வியால் டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கான தகுதியை இழந்தது. இந்தத் தோல்வியின் எதிரொலி தான் பிசிசிஐ கொண்டு வந்துள்ள புதிய மாற்றங்களுக்கு காரணமா? என்று தெளிவாகத் தெரியவில்லை.

ஹர்சித் ராணா, சிவம் துபேக்கு பதிலாகக் களமிறங்கியது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. மாற்று வீரர் விதிமுறையை ஐசிசி தலையிட்டு தெளிவாக மாற்ற வேண்டும்.

நன்றி :

படங்கள் - இணையதளம்

தரவுகள் -ESPNCricinfo மற்றும் ICC இணையதளம்

தொடர்புக்கு வாட்சப் - +91 8056609320

Thuduppattam7@gmail.com

X - @thuduppattam

உள்ளே

1	டெஸ்ட் சாம்பியன்ஷிப்	5
2	காவலன்	8
3	சிட்னியில் சிதைந்த கனவு -	9
4	மறக்க முடியாத போட்டி - [மைக்கேல் ராஜ்]	14
5	டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியல்	17
6	சூப்பர் கிங்ஸ் பேரன்ட்ஸ் அணி	18
7	சிக்ஸர் பதில்கள்	21
8	மகளிர் போட்டி முடிவுகள்	24
9	நியூசிலாந்து - இலங்கை ஒருநாள் தொடர்	26
10	போட்டித் துணுக்குகள் 1	29
11	தரவரிசை டெஸ்ட்	31
12	உள்ளூராட்டம்	32
13	சாதனைத் துளிகள்	35
14	கொஞ்சம் கிரிக்கெட் நிறைய நினைவுகள்	36
15	ஆப்கானின் அற்புதம்	38
16	தரவரிசை டி20	40
17	அடிபொலி கிரிக்கெட்	41
18	சூப்பர் ஸ்மாஷ்	43
19	தரவரிசை ஒருநாள்	46
20	இளையோர் மகளிர் உலகக் கோப்பை	49
21	சகோதரக் கிரிக்கெட்	53
22	ஜனவரி மாதப் போட்டி முடிவுகள்	54

உள்ளே		
23	சுழலுக்கு சுழல்	57
24	இம்பாக்ட் ப்ளேயர்	60
25	பிப்ரவரி மாதப் போட்டிகள்	62
26	பிக் பாஷ்	66
27	மைல்கல்லை எட்டியவர்கள்	70
28	இந்தியா - அயர்லாந்து ஒருநாள் தொடர்	72
29	மகளிர் ஆஷஸ்	75
30	கடைசிப் பக்கம்	77

பத்மஶ்ரீ விருதுக்குத் தேர்வாகியுள்ள தமிழக கிரிக்கெட் வீரர் அஸ்வினுக்கு துடுப்பாட்டம் குழுவின் வாழ்த்துகள்.

டெஸ்ட் சாம்பியன்ஷிப்

டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தென்னாப்பிரிக்கா முதல் அணியாகத் தகுதி பெற்றுள்ளது. டெம்பா பவுமா தலைமையிலான அணி 12 போட்டிகளில் 8-ல் வென்று தனது இடத்தை உறுதி செய்தது.

நடப்புச்சுற்று டெஸ்ட் சாம்பியன்ஷிப்பைத் தென்னாப்பிரிக்கா அணி, இந்திய அணியை இன்னிங்ஸ் தோல்வி அடையச் செய்து துவங்கியது. அந்தப் போட்டியில் பவுமா காயம் அடைந்தார், பேட்டிங் செய்யவில்லை. 2-வது போட்டியில் டீம் எல்கர் கேப்டனாக செயல்பட்டார். தனது கடைசிப் போட்டியில் ஆடிய அவருக்கு சிறப்பு செய்வதாக அமைந்தது. ஆனால் போட்டியை இந்தியா எளிதாக வென்றது.

தென்னாப்பிரிக்காவுக்கு அடுத்த தொடர் நியூசிலாந்தில் அமைந்தது. எஸ்ஏ20 தொடர் நடந்த சமயம் என்பதால் தென்னாப்பிரிக்கா அணி நிறைய புதுமுக வீரர்களை அனுப்பியது. முதல் டெஸ்டில் கேப்டன் நீல் பிரான்ட் உட்பட ஆறு அறிமுக வீரர்கள் களம் இறங்கினர். நியூசிலாந்து இரண்டு டெஸ்ட்களையும் எளிதாக வென்றது.

அடுத்து தென்னாப்பிரிக்கா அணி வெஸ்ட் இண்டீஸ் சென்றது. பவுமா அணிக்குத் திரும்பினார். ஒரு டெஸ்ட் டிரா, இன்னொரு டெஸ்ட் வெற்றி பெற்றுத் திரும்பியது தென்னாப்பிரிக்கா.

பவுமா மீண்டும் காயத்தில் சிக்க மார்க்ரம் தலைமையிலான அணி பங்களாதேஷ் சென்று இரண்டு போட்டிகளையும் வென்றது. அடுத்து இலங்கை அணி தென்னாப்பிரிக்கா சென்று இரண்டு போட்டிகளிலும் தோற்றது.

கடைசியாக பாகிஸ்தானுக்கும் அதே நிலை. 12 போட்டிகளில் 7 போட்டிகளில் மட்டுமே பவுமா பங்கேற்றார். 7 போட்டிகளில் 6ல் வெற்றி ஒரு டிரா. இன்னொரு முக்கியமான விஷயம் தென்னாப்பிரிக்கா அணிக்கு எல்லாமே இரண்டு டெஸ்ட்களைக் கொண்ட தொடர். வெளிநாட்டுத் தொடர்கள் நியூசிலாந்து, வெஸ்ட்

இண்டீஸ் மற்றும் பங்களாதேஷில். இதில் நியூசிலாந்து மட்டுமே கடினமான இடம். அதில் தோற்றது.

இன்னொரு கவனிக்கத்தக்க விசயம், இந்த டெஸ்ட் சாம்பியன்ஷிப் தொடரின் டாப் 10 பேட்டர் மற்றும் பந்துவீச்சாளர் பட்டியலில் தென் ஆப்ரிக்கா வீரர் யாரும் கிடையாது. இதிலிருந்து தெரிய வருவது தென்னாப்பிரிக்கா அணியின் செயல்பாடு குறிப்பிட்ட வீரர்களை மட்டும் சார்ந்து இல்லை. மொத்த அணியும் சிறப்பாக செயல்பட்டு இந்த இடத்தை அடைந்துள்ளது.

பவுமாவை வைத்து எக்கச்சக்கக் கேலிகள், கிண்டல்கள் வந்துள்ளன. இந்தத் தொடரில் பவுமா 4 அரை சதங்கள் மற்றும் 2 சதங்கள் அடித்துள்ளார்.

இறுதிப் போட்டிக்குச் சென்றுள்ள இன்னொரு அணி ஆஸ்திரேலியா. 17 போட்டிகளில் கலந்து 11-ல் வெற்றி பெற்றுள்ளது. அனைத்துப் போட்டிகளிலும் கேப்டனாக செயல்பட்டவர் பாட் கம்மின்ஸ். ஒரு வேகப்பந்து வீச்சாளர் உடல்திறனை நல்ல முறையில் வைத்து இவ்வளவு தூரம் வருவது பெரிய விசயம். அதற்காக சிறப்புப் பாராட்டுகள். அடுத்ததாக நடக்கவுள்ள இலங்கைத் தொடரில் பங்கேற்கவில்லை கம்மின்ஸ்.

ஆஸ்திரேலியா தனது டெஸ்ட் சாம்பியன்ஷிப் நடப்பு சுற்றை இங்கிலாந்தில் ஆஷஸ் தொடரில் தொடங்கியது. முதல் இரண்டு டெஸ்டிலும் வென்றது. மூன்றாவது டெஸ்டில் தோல்வி, நான்காவது டிரா, ஐந்தாவது தோல்வி என தொடர் சமனில் முடிந்தது.

அடுத்த தொடர் பாகிஸ்தான், ஆஸ்திரேலியாவுக்கு சென்றது. மூன்று டெஸ்ட்களையும் ஆஸ்திரேலியா வென்றது. இரண்டாவது டெஸ்டில் ஆட்டநாயகன் கம்மின்ஸ். வெஸ்ட் இண்டீஸ், ஆஸ்திரேலியாவுக்கு சென்று இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடியது. ஒன்று வெற்றி இன்னொன்று தோல்வி.

அடுத்ததாக ஆஸ்திரேலியா, நியூசிலாந்துக்கு சென்று இரண்டு டெஸ்ட்களிலும் வென்றது. அதற்குப் பிறகு பார்டர் கவாஸ்கர் தொடர். இந்தியா முதல் போட்டியில் வென்று சிறப்பாகத் துவங்கினாலும் அடுத்த நான்கு டெஸ்ட்களையும் கோட்டைவிட்டது. மழை விளையாடிய மூன்றாவது டெஸ்ட் மட்டும் டிரா.

ஆஸ்திரேலியாவுக்குக் கடினமான எதிரியான தென்னாப்பிரிக்காவுடன் நடப்பு சுற்றில் போட்டிகள் இல்லை. இந்தியா மற்றும் பாகிஸ்தானை சொந்த மண்ணில் எதிர் கொண்டது வசதியான அம்சம். இலங்கைத் தொடர் வெளிநாட்டுத் தொடர் என்றாலும் இறுதிப் போட்டி உறுதியான பின்னர் நடப்பதால் முக்கியத்துவம் பெறவில்லை.

நடப்புச் சுற்றில் பாட் கம்மின்ஸ் 3 முறை நான்கு விக்கெட்டுகளையும், 5 முறை 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். ஒரு அரைசதம் அடித்துள்ளார்.

காவலன்

தென்னாப்பிரிக்காவில் நடைபெறும் எஸ்ஏ20 தொடரில் ஜனவரி 10ம் தேதி டர்பன் சூப்பர் ஜெயின்ட்ஸ் மற்றும் பிரிட்டோரியா கேப்பிட்டல்ஸ் அணிகள் மோதின. டர்பனில் நடைபெற்ற இந்தப் போட்டியில் டர்பன் அணி முதலில் பேட்டிங் செய்து 209 ரன்களைக் குவித்தது.

பிரிட்டோரியா அணியின் துவக்க வீரர்கள் ரஹ்மானுல்லா குர்பாஸ் மற்றும் அலெக்ஸ் ஹேல்ஸ் அதிரடியாக ஆடி 12 ஓவர்களில் 154 ரன்கள் எடுத்தனர்.

ஆனால் கடைசி மூன்று ஓவர்களில் பிரிட்டோரியாவுக்கு 21 ரன்கள் தேவைப்பட்டன. 18-வது ஓவரை நவீன் உல் ஹக் வீசினார். அந்த ஓவரின் முதல் நான்கு பந்துகளில் தலா 1 ரன்கள் எடுக்கப்பட்டன. 5-வது பந்தைத் தூக்கி அடித்து லாங் ஆனில் கேட்ச் கொடுத்து வீழ்ந்தார் நீஷம். 6-வது பந்தை நவீன் யார்க்கராக வீச வெறின்னே ரன் எதுவும் எடுக்கவில்லை.

12 பந்துகளில் 17 ரன்கள் தேவைப்பட்டன. 19-வது ஓவரைக் கேப்டன் மகராஜ் வீசி மூன்று ரன்களை மட்டுமே கொடுத்து லிவிங்ஸ்டன் விக்கெட்டை வீழ்த்தினார். கடைசி ஓவரில் 14 ரன்கள் தேவைப்பட்டன. களத்தில் 18 வயதான ஸ்டீவன் ஸ்டோல்க் மற்றும் கைல் வெறின்னே இருந்தனர்.

நவீன் இறுதி ஓவரை வீசினார். முதல் பந்தில் ஸ்டோல்க் லெக்பை, ஒரு ரன் எடுத்து எதிர்முனைக்கு சென்றார். அடுத்த இரண்டு பந்துகளில் வெறின்னே தலா 2 ரன்கள் எடுத்தார். 3 பந்துகளில் வெற்றிக்கு 9 ரன்கள் தேவைப்பட்டன.

4-வது பந்தில் பீல்டர் பிரெட்ஸ்கீ சரியாகக் கணிக்காமல் முன்னால் நகர்ந்ததால் பவுண்டரி போனது. 5-வது பந்தை சரியான இடத்தில் குத்தினார் நவீன், வெறின்னேவால் ஒரு ரன் மட்டுமே எடுக்க முடிந்தது. கடைசிப் பந்தை எதிர் கொண்டார் இளம் ஸ்டோல்க், ஸ்டம்புக்கு குறுக்கே வந்து அடித்தாட முயன்றார் பேட்டில் சிக்கவில்லை. லெக்பையாக ஒரு ரன் கிடைத்தது. டர்பன் அணி 2 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

தோல்வியை நோக்கிச் சென்ற போட்டியைத் தனது இரண்டு ஓவர்கள் மூலம் காப்பாற்றினார் காவலன் நவீன் உல் ஹக்.

சிட்னியில் சிதைந்த நம்பிக்கை

- கா. இராமச்சந்திரன்

பார்டர் கவாஸ்கர் கோப்பையின் நான்கு போட்டிகள் முடிவில் 2-1 என ஆஸ்திரேலியா முன்னிலை வகிக்க, ஐந்தாவது மற்றும் இறுதிப் போட்டி சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இந்தியாவிற்கு இந்தப் போட்டியை வென்று, தொடரை சமன் செய்து கோப்பையைத் தக்க வைக்க வேண்டிய அழுத்தம், ஆஸ்திரேலியாவிற்கு தொடரை வென்று உலக சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டி ஓட்டத்தில் இருந்து இந்தியாவை அப்புறப்படுத்த வேண்டும்.

இப்படியான சூழலில் தொடங்கிய இந்தப் போட்டியில் இந்திய அணித்தலைவர் ரோகித் சர்மா ஆடும் 11-ல் இடம்பெறவில்லை. பும்ரா அணித்தலைவராக செயல்பட்டார். ஆகாஷ் தீப் முதுகு வலி காரணமாக விளையாடாததால் பிரசித் கிருஷ்ணா அணியில் இடம் பெற்றிருந்தார். முதலில் பேட் செய்த இந்திய அணி 185 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. ஆஸ்திரேலியாவின் முதல் இன்னிங்ஸ் 180 ரன்களில் முடிந்தது. அதையடுத்து இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய இந்திய அணி நேர்மறையாக பேட்டிங்கைத் தொடங்கினர். ஆனால் அது வெகு நேரம் நீடிக்கவில்லை. அடுத்தடுத்து விக்கெட்கள் விழுந்து கொண்டே இருந்தன. ரிஷப் பண்ட் முதல் பந்திலேயே ஆறு ரன்கள் அடித்து தனது வருகையைப் பதிவு செய்தார். அதிரடி ஆட்டம் என்பதை முடிவு செய்து 33 பந்துகளில் 61 ரன்கள் அடித்து ஆஸ்திரேலியாவிற்கு அச்சத்தை

அளித்தார். அவரின் விக்கெட்டுக்குப் பிறகு இந்தியாவிற்கு சாதகமாக எதுவும் நடக்கவில்லை. இறுதியில் 157 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்து, 162 இலக்காக நிர்ணயித்தது.

இரண்டாம் நாள் ஆட்டத்தில் நடுவில் காயம் காரணமாக மருத்துவமனை சென்று வந்த பும்ரா பேட்டிங் இறங்கினார். ஆனால் பந்து வீச வரவில்லை. அங்கேயே இந்திய ரசிகர்களின் நம்பிக்கையில் இடி விழுந்தது என்று சொல்லலாம். நாம் மூன்றாம் நாள் காலையில் கஷ்டப்பட்டு அடித்த ரன்களை ஆஸ்திரேலிய அணி இரண்டு ஓவர்களில் எட்டியது. பிரசித் & சிராஜ் சரியான line & length பிடிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டனர். பிரசித் கிருஷ்ணா 3 விக்கெட்களையும், சிராஜ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இருப்பினும் இந்தியாவின் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. ஆஸ்திரேலியா இந்தப் போட்டியை 6 விக்கெட் வித்தியாசத்திலும் தொடரை 3-1 எனவும் வென்று டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது.

இன்னிங்ஸ்	இந்தியா	ஆஸ்திரேலியா
முதல் இன்னிங்ஸ்	185/10 ரிஷப் பண்ட் - 40 ஸ்காட் போலண்ட் - 4/31	181/10 வெப்ஸ்டர் - 57 பிரசித் கிருஷ்ணா - 3/42
இரண்டாவது இன்னிங்ஸ்	157/10 ரிஷப் பண்ட் - 61 ஸ்காட் போலண்ட் - 6/45	162/4 கவாஜா - 41 பிரசித் கிருஷ்ணா - 3/65

ஆட்ட நாயகன் : ஸ்காட் போலண்ட் - 4/31 & 6/45

தொடர் நாயகன் : ஜஸ்ப்ரிட் பும்ரா - 32 விக்கெட்கள்.

தொடரில் முதல் மூன்று பேட்ஸ்மேன்கள்

1. ட்ராவிஸ் ஹெட் - 448
2. ஜெய்ஸ்வால் - 391
3. ஸ்டீவன் ஸ்மித் - 314

தொடரில் முதல் மூன்று பந்துவீச்சாளர்கள்

1. ஜஸ்ப்ரிட் பும்ரா - 32
2. பாட் கம்மின்ஸ் - 25
3. ஸ்காட் போலண்ட் - 21

துடுப்பாட்டம் அனாலிசிஸ்

ஆஸ்திரேலியாவின் ஆதிக்கம்:

ஆஸ்திரேலிய மைதானங்களில் எப்பொழுதும் ஆஸ்திரேலியாவின் கை ஓங்கி தான் இருக்கும். ஆனால் இந்திய அணி குறிப்பாக ஆஸ்திரேலியாவில் நடந்த கடந்த இரண்டு பார்டர் கவாஸ்கர் கோப்பைகளையும் வென்றதன் காரணமாக இந்தத் தொடர் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. கூடுதலாக முதல் பெர்த் போட்டி வெற்றி, இந்தியாவிற்கு சாதகமான தொடக்கத்தைத் தந்தது.

ஆனால் ஆஸ்திரேலியா தாங்கள் ஒரு சாம்பியன்ஸ் என்று நிரூபிக்கும் விதமாக முதல் தோல்வியில் இருந்து மீண்டு 3-1 என்று தொடரைக் கைப்பற்றி, அணித்தலைவர் கம்மின்ஸ் தலைமைக்கு மேலும் ஒரு மகுடமாக இந்தத் தொடர் வெற்றி அமைந்துள்ளது. கம்மின்ஸ், போலண்ட், ஸ்டார்க் வேகப்பந்து கூட்டணி 64 விக்கெட்களை வீழ்த்தியது. ட்ராவிஸ் ஹெட்டின் நேர்மறையான ஆட்டங்கள், ஸ்மித்தின் சதங்கள்

ஆஸ்திரேலியாவைத் தொடரில் பெரிய ஆதிக்கம் செலுத்த வழி வகுத்தது. டாப் ஆர்டர் பேட்ஸ்மேன்கள் யாராவது ஒருவர் தேவையான நேரத்தில் முன் நின்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். சாம் கன்ஸ்டாஸ் அணிக்கு ஒரு சிறப்பான அறிமுகமாக இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. வெப்ஸ்டரும் தனது முதல் ஆட்டத்திலேயே தனது இருப்பை நிரூபித்துள்ளார்.

இந்தியாவின் படிப்பினை:

இந்திய அணித்தேர்வில் சில விவாதங்கள் இருந்தன. ஆனால் இளைஞர்களை நோக்கி அடுத்த கட்டம் செல்லும் போது சில மூத்த வீரர்களை இழக்க நேரிடும் என்பது எதார்த்தம். அதனால் அணித்தேர்வு சரியே எனும் அடிப்படையில் பார்க்கும் பொழுது, இந்திய பேட்ஸ்மேன்கள்தான் இந்தத் தோல்விக்கு முக்கிய காரணம். சுப்மான் கில், ரோகித் சர்மா, விரட் கோலி ஆகிய டாப் ஆர்டர் பேட்டர்களின் சொதப்பல், பொறுப்பற்ற ஆட்டம் இந்தியாவை அதல பாதாளத்திற்குத் தள்ளியது.

"தனிமரம் தோப்பாகாது" a lone warrior ஜஸ்ப்ரிட் பும்ரா - இந்தத் தொடரில் எல்லா நேரங்களிலும் கைகொடுத்து இந்தியாவை மீட்டுள்ளார். ஆனால் அவருக்கு உறுதுணையாக மற்ற வீரர்கள் செயல்படவில்லை என்பது தான் வருத்தம். நிதீஷ் குமார் ரெட்டி அறிமுக வீரராக இந்திய அணிக்கு சிறப்பான பங்காற்றியுள்ளார். இந்தத் தொடரில் பும்ராவிற்கு அடுத்து ஜெய்ஸ்வால் ஒரு நல்ல ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ராகுலும் ஓரளவு intent உடன் விளையாடினார். முகமது ஷமி இல்லாதது அணிக்குப் பேரிழப்பாக இருந்தது.

விராட் கோலி shot தேர்வு பெரிதாக விமர்சனத்திற்கு உள்ளானது. ஸ்டெம்புக்கு வெளியே செல்லும் பந்தை தேடிச்சென்று அடித்துத் தன் விக்கெட்டை மீண்டும் மீண்டும் இழந்தார். டாப் பேட்ஸ்மேன்கள் தங்கள் விக்கெட்டுக்கான முக்கியத்துவத்தை சற்றும் உணராமல் விளையாடியது ரசிகர்களுக்கும் கிரிக்கெட் விமர்சகர்களுக்கும் ஏமாற்றத்தை அளித்தது.

கடந்த இரண்டு முறையும் டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்குத் தேர்வாகியும் தோல்வியைத் தழுவிய இந்திய அணி இந்த முறையும் ரசிகர்களுக்கு அந்த சிரமம் வேண்டாம் என்று முடிவு எடுத்தது போல் ஒரு எண்ணத்தைக் கடந்த நான்கு மாத செயல்பாடுகள் காட்டுகிறன.

இந்தத் தோல்வி இந்திய அணியில் எவ்வித மாற்றங்களைக் கொண்டுவரக் காத்திருக்கிறது என்பதை எதிர்வரும் காலங்களில் பொறுத்திருந்து பார்ப்போம்.

மறக்க முடியாத போட்டி

- *ஞா. மைக்கேல்ராஜ்*

2000-ஆம் வருசத்துக்கு முன்னாடிலாம் TV ல கிரிக்கெட் பாக்க ஊருல வசதி கிடையாது. அதுலயும் டெஸ்ட் மேட்ச் லாம் ஒண்ணு தூர்தர்ஷன்ல ஒளிபரப்ப மாட்டாங்க, இல்லனா பஞ்சாயத்து டிவில ஊர்க்காரங்க போடவிடமாட்டாங்க. ஆனா வானொலியில லைவ் கமெண்டரி போடுவாங்க. ஆனா எனக்குக் கேட்கப் பிடிக்காது (கேட்கத் தெரியாது) அதுல இங்கிலீஸ்ல சொல்லுவாங்கங்கிறதால. கிராமத்து அரசுப் பள்ளிக்கூடத்துல படிச்சுக்கிட்டு இருந்தவனுக்கு இங்கிலீஸ் பாடமே தகிடுதத்தம். இதுல எங்க இங்கிலீஸ் கிரிக்கெட் கமண்டரி கேட்குறது !

அப்படிப்பட்ட சமயத்துல இந்தியா கிரிக்கெட் டீம் ஒருநாள் போட்டிகளில் கொஞ்சம் நல்லாவே ஆட்டிட்டிருந்த காலம். ஷார்ஜாவின் புயல் சச்சின்லாம் தூள் கிளப்பிக்கிட்டு இருந்த நேரம். அதே நேரம் சச்சின் விளையாண்டா மட்டும் தான் இந்தியா ஜெயிக்கும்னு இருந்த காலம் வேற. அப்படிப்பட்ட காலத்துல நடந்த ஒரு மறக்க முடியாத டெஸ்ட் மேட்ச்.

பாகிஸ்தான் நம்ம கூட மேட்ச்னாலே வெறிகொண்டு ஆடுவாங்க. அதுவும் இந்த சயீத் அன்வர், இன்சமாம் உல் ஹக், இஜாஸ் அகமது, யூனிஸ்கான், சலீம் மாலிக்னு வரிசையா வந்துக்கிட்டே இருப்பாங்க. பவுலிங்கல அக்ரம் ஒரே அக்கிரமமா போடுவான். வக்கார் உக்கிரமமா போடுவான். ஒவ்வொரு பந்துக்கும் இந்திய பேட்ஸ்மேன் பயப்படுறானோ இல்லையோ நாம உயிரக் கைல பிடிச்சிக்கிட்டு உக்காந்துருக்குற மாதிரி தான் இருக்கும்.

சென்னைக்கே போனதில்லை அப்போனு இருந்தாலும் சென்னைல கிரிக்கெட் மேட்ச் நடக்குதுனு கேள்விப்பட்டா என்னமோ எங்க ஊருலயே மேட்ச் நடக்குற ஒரு பீலிங். அப்படித்தான் பாகிஸ்தான் சென்னைக்கு வந்து இந்தியா கூட டெஸ்ட் ஆடுச்சு 1999-ல.

மொத இன்னிங்ஸ்ல பாகிஸ்தான் பேட் பண்ண ஆரம்பிச்சி அடுத்தடுத்து விக்கெட்ஸ் விழுந்தப்போ ஒரே குஷி. 100 ரன்களுக்குள் 5 பேரு அவுட்டு. அதுவும் அப்ரிடி, அன்வர், இன்சமாம், இஜாஸ், சலீம்லாம் காலி. அப்பாடா சீக்கிரம் முடிச்சிடுவாங்கனு பாத்தா வழக்கம்போல யூனிஸ்கான் மற்றும் கீப்பர் மொயின்கான் நின்னுட்டானுங்க. அதுக்கப்புறம் வாசிமும் அவன் பங்குக்கு நிக்க 230+ ரன்கள் அடிச்சாங்க பாகிஸ்தான். நம்ம பேட்டிங் ஆட ஆரம்பிச்சா நல்லா தான் போச்சு மொதல்ல. அப்புறம் இடையிடைல விக்கெட் போயிட்டுருக்க (சச்சின் டக்-அவுட்) ஒருவழியா 250+ அடிச்சோம் இதுல 20 போல எக்ஸ்டரால வந்துச்சு.

ரெண்டாவது இன்னிங்ஸ்ல பாகிஸ்தான் பேட் பண்ண ஆரம்பிச்சி மொத ரெண்டு விக்கெட்ஸ் சீக்கிரம் போனாலும் அப்ரிடி வேலையக் காமிச்சிட்டான். ஆனாலும் மத்தவங்கள ஓரளவுக்குக் கண்ட்ரோல் பண்ணுனதால 280+ அடிச்சி முடிச்சாங்க பாகிஸ்தான். மொத இன்னிங்ஸ்ல முக்கியமான நேரத்துல பார்ட்னர்ஷிப்பை உடைச்ச சச்சின், ரெண்டாவது இன்னிங்ஸ்லயும் ரெண்டு முக்கியமான விக்கெட்ஸ் எடுத்து பவுலிங்ல கலக்கிட்டார். மொத இன்னிங்ஸ் பேட்டிங்கில டக்கவுட் ஆனாலும் பவுலிங்ல கலக்கல்.

இதுவரைக்கும் நடந்த எல்லாமே பசங்க சொல்லி நியூஸ் பேப்பர்ல பாத்து தான் தெரிஞ்சிக்கிட்டேன் அப்போ. நாலாவது நாள்ல இந்தியா சேசிங் செஞ்சிகிட்டு இருந்தப்போ என்னால கட்டுப்படுத்த முடியல. புரியுதோ இல்லையோ போயி கமெண்டரி கேட்போம்னு உக்காந்தாச்சு. 5 விக்கெட்ஸ் அடுத்தடுத்து போனதும் வழக்கமான இந்திய சேசிங்கினு கடுப்பாகிடுச்சு. சரி சச்சின் இருக்கிற வரைக்கும் பாப்போம்னு (கேப்போம்னு) நம்பிக்கையோட இருந்தேன். மோங்கியா கைகொடுக்க நல்லபடியா சேசிங் போயிட்டுருந்துச்சு. மோங்கியா அரை சதம் அடிச்சி அவுட்டானாலும், சுனில் ஜோஷி கொஞ்சம் சப்போர்ட் குடுத்ததால சச்சினும் மேட்ச்ச முடிக்கிற நிலைமைக்கு கொண்டு போயிட்டார்.

ஜெயிக்கிறதுக்கு 17 ரன்கள் தேவைப்பட்டப்போ சச்சின் அவுட்டு. செம்ம காண்டாகிடுச்சு. சரி பரவா இல்ல இன்னும் 3 விக்கெட்ஸ் இருக்கே தடவித் தடவி அடிச்சிடுவாங்கனு பாத்தா அடுத்த 4 ரன்னுக்குள்ள மிச்சம் இருந்த மூணு பேரும் அவுட்டு. 12 ரன்கள் வித்தியாசத்தில் நாம தோத்துப் போனோம். மூணு நாலு நாளா அதே நினைப்பா இருந்துச்சி. இதுக்கு நாம லைவ் கமண்டரி கேட்காமலே இருந்திருக்கலாம்னு வேற ஒரே பொலம்பல். இந்த வானொலியில் கேட்ட வர்ணனையால தான் இது மறக்கவே முடியாத போட்டியாவும் ஆகிடுச்சு.

அப்போ இருந்து ஆரம்பிச்ச பழக்கம் இந்தியா நெருக்கமான சேசிங் பண்ற மேட்ச் எல்லாம் பாக்குறத நிறுத்திட்டேன். வானொலியில் கடைசியா கேட்ட மேட்சும் அது தான். அந்த மேட்சிலேயும் நிரூபணமானது சச்சின் இருக்குற வரைக்கும் தான் மேட்ச் ஜெயிக்க சான்ஸ் இருக்குனு.

டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியல்

இடம்	அணிகள்	போட்டிகள்	வெற்றி	தோல்வி	டிரா	டை	புள்ளிகள்	வெற்றி %
1	தென் ஆப்பிரிக்கா	12	8	3	1	0	100	69.44
2	ஆஸ்திரேலியா	18	12	4	2	0	142	65.74
3	இந்தியா	19	9	8	2	0	114	50.00
4	நியூஸிலாந்து	14	7	7	0	0	81	48.21
5	இங்கிலாந்து	22	11	10	1	0	114	43.18
6	இலங்கை	12	5	7	0	0	60	41.67
7	பங்களாதேஷ்	12	4	8	0	0	45	31.25
8	வெஸ்ட் இண்டீஸ்	13	3	8	2	0	44	28.21
9	பாகிஸ்தான்	14	5	9	0	0	47	27.98

சூப்பர் கிங்ஸ் அகடமி பேரன்ட்ஸ் அணி

சென்ற ஆண்டில் வந்த படங்களில் அதிக பேரைக் கவர்ந்த படம் லப்பர் பந்து. படத்தில் கெத்து, அன்பு கதாபாத்திரங்கள் அனைவரையும் கவர்ந்தவை. அந்தப் படத்தில் இன்னொரு முக்கிய கதாபாத்திரம் கருப்பையா. கருப்பையாவிடம் ஏன் கிரிக்கெட் பிடிக்கும் என்ற கேள்விக்கு கிரிக்கெட்னாலே பிடிக்கும் என்பார். அதே சமயம் தான் தொட முடியாத உயரத்தைக் கிரிக்கெட்டில் தன் மகள் அடைய வேண்டும் என்று தன் மகளை சரியான பயிற்சிக்கு அனுப்புவார்.

அதே போலத் தனது பிள்ளைகளை சிறப்பான பயிற்சி மையத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு, தங்களது வேலையைத் திறம்பட செய்து கொண்டே, தங்களுக்குப் பிடித்த கிரிக்கெட்டை ஆடும் கருப்பையாக்களைக் கொண்ட அணி தான் சூப்பர் கிங்ஸ் பெற்றோர்கள் 40+ அணி. அந்த அணியை பற்றி...

துடுப்பாட்டத்திற்காக சூப்பர் கிங்ஸ் பேரன்ட்ஸ் அணியை சந்தித்த போது அவர்களது கேப்டன் திலக் கூறியது "இந்த அணியில் இருக்கும் ஒவ்வொருவரும் வெவ்வேறு துறைகளில் பணியாற்றுகிறார்கள். கிரிக்கெட் என்ற ஒன்றுக்காக இணைந்து செயல்படுகிறார்கள். வாரம்தோறும் நடைபெறும் பயிற்சியை யாரும் தவறவிடுவது இல்லை. பொருளுதவி, நிதியதவியும் தயக்கமில்லாமல் செய்கிறார்கள், மேலும் இப்போது அணியின் வலிமை அதிகரித்துள்ளது. நிறைய போட்டித் தொடர்களில் பங்கேற்க எங்கள் அணியை அழைக்கிறார்கள்" என்றார்.

அணியின் ஒருங்கிணைப்பாளர் மணிகண்டன் கூறியது "சாதாரணமாகத் துவங்கிய அணி இப்போது ஓராண்டைத் தாண்டி, இரண்டாம் ஆண்டில் அடி எடுத்து வைத்து விட்டோம். டிசம்பர் 19-ல் ஆண்டு விழா கொண்டாடினோம். வார இறுதி நாட்களில் விளையாடும் கிரிக்கெட், எங்களது எல்லா மன அழுத்தத்தையும் குறைத்து புத்துணர்வு அளிக்கிறது. மேலும் நாங்கள் விளையாடுவது எங்கள் பிள்ளைகளுக்காக. எங்களைப் பார்த்து அவர்களும் விளையாட வேண்டும்" என்று கூறினார்.

துடுப்பாட்டம் சார்பாக நேரில் சென்று பார்த்த போட்டியில் (மெஜஸ்டிக் சீனியர்ஸ் டிராபி தொடர் பற்றிய கட்டுரை "உள்ளூராட்டம்" பகுதியில் இடம் பெற்றுள்ளது). மெஜஸ்டிக் சீனியர்ஸ் அணியை, சூப்பர் கிங்ஸ் அகடமி பேரன்ட்ஸ்

அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. சிறப்பாகப் பந்து வீசிய முத்துமாலை ஆட்டநாயகன் விருதை வென்றார். 54 வயதான அஜித்குமார் ரேஸில் வென்ற, அதே நாளில் நடைபெற்ற போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

அணி வீரர்கள் பற்றிய தகவல்கள்

வீரர்	**சந்துரு**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	-
ரோல்	டாப் ஆர்டர் பேட்ஸ்மேன்
வீரர்	**நாராயணன்**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	-
ரோல்	டாப் ஆர்டர் பேட்ஸ்மேன்
வீரர்	**கமல சங்கர்**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	-
ரோல்	டாப் ஆர்டர் பேட்ஸ்மேன்
வீரர்	**போஸ்**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	வலதுகை ஆஃப் ஸ்பின்
ரோல்	ஆல் ரவுண்டர்
வீரர்	**முத்துமாலை**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	வலதுகை மித வேகம்
ரோல்	ஆல் ரவுண்டர்
வீரர்	**சங்கர் திலக்**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	வலதுகை மித வேகம்
ரோல்	கேப்டன்
வீரர்	**சுபாஷ்**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	வலதுகை மித வேகம்
ரோல்	ஆல் ரவுண்டர்
வீரர்	**முரளிதரன்**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்

பௌலிங்	லெக் பிரேக்
ரோல்	ஆல் ரவுண்டர்
வீரர்	**மணிகண்டன்**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	வலதுகை மித வேகம்
ரோல்	ஆல் ரவுண்டர்
வீரர்	ஆறுமுகம்
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	இடது கை மித வேகம்
ரோல்	ஆல் ரவுண்டர்
வீரர்	**நீலகண்டன்**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	வலதுகை ஆஃப் ஸ்பின்
ரோல்	ஆல் ரவுண்டர்
வீரர்	**பாரதி**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	வலதுகை மித வேகம்
ரோல்	ஆல் ரவுண்டர்
வீரர்	**ஆழ்வார்**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	வலதுகை மித வேகம்
ரோல்	ஆல் ரவுண்டர்
வீரர்	**ராஜலிங்கம்**
பேட்டிங்	வலதுகை பேட்ஸ்மேன்
பௌலிங்	-
ரோல்	விக்கெட் கீப்பர்

சிக்ஸர் பதில்கள்

மைதானத்தில் நிலவும் டியூ பற்றி...

(ஜான் எட்வர்ட், மண்டபம்)

மைதானத்தில் பனி/ ஈரப்பதம்:

பகல் இரவு ஆட்டம் என்றாலே டாஸ் வென்றவுடன் அணித்தலைவர் நாங்கள் பந்து வீச்சைத் தேர்ந்தெடுக்கிறோம் இரண்டாவது இன்னிங்ஸில் மைதானத்தில் Dew காரணமாக பேட்டிங் சாதகமாக இருக்கும் என்று சொல்லக் கேட்டிருப்பீர்கள்.

வெப்பத்தின் காரணமான ஈரக்கசிவு மற்றும் பனிப் பொழிவின் காரணமாக மைதானத்தின் புல் தரைகள் ஈரப்பதமாக மாறுவதைத் தான் Dew என்று குறிப்பிடுவார்கள்.

ஈரப்பதமான மைதானம், கிரிக்கெட் பந்தை ஈரமாக்கி சுழற்பந்து வீச்சாளர்களுக்குப் பந்து பிடி கிடைப்பது கடினமாகி சரியாக வீச முடியாமல் சென்றுவிடும். இது பேட்ஸ்மேன்களுக்கு சாதகமாக அமைந்துவிடும்.

சென்ற இதழில் சையது முஸ்டக் அலி தொடர் பற்றிய கட்டுரை இடம் பெற்றது. முஸ்டக் அலி பற்றி சொல்லுங்க.

(ரெங்கநாதன், கருங்கல்பாளையம்)

சையது முஸ்டக் அலி இந்திய டெஸ்ட் அணியின் முன்னாள் துவக்க வீரர். வெளிநாட்டில் சதமடித்த முதல் இந்திய வீரர். 1936ல் இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் சதமடித்தார் முஸ்டக் அலி. முஸ்டக் அலி வலதுகை பேட்ஸ்மேன், இடதுகை சுழற்பந்து வீச்சாளர்.

முஸ்டக் அலி இந்தூரில் பிறந்தவர். 1964-ல் பத்மஸ்ரீ விருது பெற்றார். 1995-ல் சிகே நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருதையும் பெற்றுள்ளார். 2005-ல் காலமானார் சையது முஸ்டக் அலி.

சமீபத்தில் ஜிம்பாப்வே அணியில் சாம் கர்ரனின் அண்ணன் பென் கர்ரன் ஆடினார். இதே போல் வேறு அண்ணன்- தம்பிகள் வேறு வேறு சர்வதேச அணிக்கு ஆடியுள்ளனரா ?

(தாமோதரன், தேவக்கோட்டை)

ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் பேட்டின்சனின் அண்ணன் டாம் பேட்டின்சன் இங்கிலாந்து அணிக்காக ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடியுள்ளார்.

அயர்லாந்து அணியின் எட் ஜாய்ஸ் முதலில் இங்கிலாந்து அணிக்காக ஆடினார். பிறகு அயர்லாந்துக்கு அணிக்கு மாறிவிட்டார். இவரது தம்பி டாம் ஜாய்ஸ் அயர்லாந்து அணிக்கு ஆடியுள்ளார்.

இந்திய அணிக்கு ஆடிய ரிஷி தவானின் தம்பி ராகவ் தவான் தற்போது உகாண்டா அணிக்கு ஆடி வருகிறார்.

கிரிக்கெட்டில் வித்தியாசமான/ சுவாரஸ்யமான நிகழ்வு ஏதாவது சொல்லுங்க.

(அருண் பிரசாத் X தளத்தில்)

சுனில் கவாஸ்கர் டெஸ்ட் போட்டிகளில் 34 சதங்கள் அடித்து, அதிக சதங்கள் அடித்த வீரர் என்ற சாதனையை வைத்திருந்தார் (பிறகு சச்சின் இந்த சாதனையை முறியடித்தார்). இவர் ஒருநாள் போட்டிகளில் ஒரே ஒரு சதம் மட்டுமே அடித்துள்ளார்.

கவாஸ்கர் 1975 உலகக் கோப்பையில் இங்கிலாந்து எதிரான போட்டியில் முதல் ஓவரில் களமிறங்கி 60-வது ஓவர் வரை களத்தில் இருந்து 36 ரன்கள் மட்டுமே எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். அவர் எதிர் கொண்ட பந்துகள் 174.

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

போட்டி	ஆடிய அணிகள்		மைதானம்	தேதி	வென்ற அணி	ஆட்டநாயகி
ஒரு நாள்	அயர்லாந்து	இந்தியா	ராஜ்கோட்	ஜனவரி 10	இந்தியா	பிரதிகா ராவல்
	238/7	241/4			6 விக்கெட்	89
ஒரு நாள்	இந்தியா	அயர்லாந்து	ராஜ்கோட்	ஜனவரி 12	இந்தியா	ஜெமிமா ரோட்ரிக்ஸ்
	370/5	254/7			116 ரன்கள்	102
ஒரு நாள்	இங்கிலாந்து	ஆஸ்திரேலியா	நார்த் சிட்னி	ஜனவரி 12	ஆஸ்திரேலியா	ஆஷ்லே கார்ட்னர்
	204	206/6			4 விக்கெட்	3/19, 2 கேட்ச் & 42*
ஒரு நாள்	ஆஸ்திரேலியா	இங்கிலாந்து	மெல்போர்ன்	ஜனவரி 14	ஆஸ்திரேலியா	அலனா கிங்
	180	159			21 ரன்கள்	13 & 4/25
ஒரு நாள்	இந்தியா	அயர்லாந்து	ராஜ்கோட்	ஜனவரி 15	இந்தியா	பிரதிகா ராவல்
	435/5	131			304 ரன்கள்	154
ஒரு நாள்	ஆஸ்திரேலியா	இங்கிலாந்து	ஹோபர்ட்	ஜனவரி 17	ஆஸ்திரேலியா	ஆஷ்லே கார்ட்னர்
	308/8	222			86 ரன்கள்	102
ஒரு நாள்	பங்களாதேஷ்	வெஸ்ட் இண்டீஸ்	செயின்ட் கிட்ஸ்	ஜனவரி 19	வெஸ்ட் இண்டீஸ்	ஹேலேய் மேத்யூஸ்
	198/9	202/1			9 விக்கெட்	2/41 & 104*
டி 20	ஆஸ்திரேலியா	இங்கிலாந்து	சிட்னி	ஜனவரி 20	ஆஸ்திரேலியா	பெத் மோனி
	198/7	141			57 ரன்கள்	75 & 2 கேட்ச்

மகளிர் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

போட்டி	ஆடிய அணிகள்		மைதானம்	தேதி	வென்ற அணி	ஆட்டநாயகி
ஒரு நாள்	பங்களாதேஷ்	வெஸ்ட் இண்டீஸ்	செயின்ட் கிட்ஸ்	ஜனவரி 21	பங்களாதேஷ்	நஹிதா அக்தர்
	184	124			60 ரன்கள்	3/31
டி 20	ஆஸ்திரேலியா	இங்கிலாந்து	கான்பெர்ரா	ஜனவரி 23	ஆஸ்திரேலியா	தஹிலா மெக்ராத்
	185/5	168/4			6 ரன்கள்#	48*
ஒரு நாள்	பங்களாதேஷ்	வெஸ்ட் இண்டீஸ்	செயின்ட் கிட்ஸ்	ஜனவரி 24	வெஸ்ட் இண்டீஸ்	கரிஷ்மா ராம்ஹரக்
	118	122/2			8 விக்கெட்	4/12
டி 20	ஆஸ்திரேலியா	இங்கிலாந்து	கான்பெர்ரா	ஜனவரி 25	ஆஸ்திரேலியா	பெத் மோனி
	162/5	90			72 ரன்கள்	94*
டெஸ்ட்	இங்கிலாந்து	ஆஸ்திரேலியா	மெல்போர்ன்	ஜனவரி 30 - பிப்ரவரி 3	ஆஸ்திரேலியா	அனபெல் சதர்லாண்ட்
	170 & 148	440			இன்னிங்ஸ் & 122 ரன்கள்	163

நியூசிலாந்து - இலங்கை ஒருநாள் தொடர்

சரித் அசலங்க தலைமையில் சென்ற ஆண்டில் இலங்கை ஒருநாள் போட்டிகளில் சிறப்பாக ஆடியது. அதே உத்வேகத்துடன் இந்த ஆண்டு நியூசிலாந்து அணியை எதிர் கொண்டது. நியூசிலாந்து அணிக்குப் புதிய கேப்டனாக சான்டனர் நியமிக்கப்பட்டார்.

முதல் போட்டி ஜனவரி 5ம் தேதி வெலிங்டனில் நடைபெற்றது. நியூசிலாந்து அணி முதலில் பந்து வீசியது. மாட் ஹென்றி முதல் ஓவரை மெய்டன் ஓவராகத் துவக்கினார்.

கமிந்து மென்டிஸ் பீல்டர் கையில் அடித்து விட்டு பரிதாபமாக ரன் அவுட் ஆனார். பத்து ஓவர்களில் இலங்கை அணி 4 விக்கெட் இழப்பிற்கு 23 ரன்களையே எடுத்தது. நிலைத்து நின்று ஆடிய லியனாகே (36), அவிஸ்கா பெர்ணான்டோ (56) அடுத்தடுத்த ஓவர்களில் அவுட் ஆனார்கள்.

ஹசரங்க இறுதிக்கட்டத்தில் 35 அடிக்க இலங்கை 178 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. மாட் ஹென்றி 19 ரன்கள் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

நியூசிலாந்து துவக்க ஆட்டக்காரர்கள் சிறப்பாக ஆட 9 விக்கெட் வித்தியாசத்தில் எளிதாக வென்றது. வில் யங் 90 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். ரச்சின் ரவீந்திரா 45 ரன்கள் அடித்தார்.

இரண்டாவது போட்டி ஹாமில்டனில் ஜனவரி 8ல் நடைபெற்றது. மழை காரணமாக தாமதமாகத் துவங்கிய இந்தப் போட்டி 37 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

இந்தப் போட்டி சிறப்பான கேட்ச்களுக்கு உதாரணமாக அமைந்தது. ரச்சின் ரவீந்திரா 79 ரன்னில் இருந்த போது எக்ஸ்ட்ரா கவர் திசையில் அடித்த பந்தை சிறப்பாகத் தாவிப் பிடித்தார் இலங்கை கேப்டன் அசலங்க. தீக்சானா இந்தப் போட்டியில் ஹாட்ரிக் விக்கெட் எடுத்தார்.

34.5 சான்ட்னர் தூக்கி அடித்த பந்தை டீப் கவர் பகுதியில் விக்ரமசிங்கே பிடித்தார்.

34.6 நாதன் ஸ்மித் அடித்த பந்தைக் கவர் திசையில் ஓடி வந்து சிறப்பாகப் பிடித்தார் கமிந்து மென்டிஸ்.

36.1 மாட் ஹென்றி சிக்ஸ் அடிக்க முயற்சிக்க உயரம் சென்ற பந்து தூரமாக செல்லவில்லை, வைட் லாங் ஆஃப் திசையில் முன்னோக்கி ஓடி வந்து சிறப்பாகப் பிடித்தார் சப்ஸ்டியூட் பீல்டர் நுவனிது பெர்ணான்டோ.

நியூசிலாந்து அணி 9 விக்கெட் இழப்பிற்கு 255 ரன்களைக் குவித்தது.

அசலங்கவை ரன் அவுட்டாக்க முயற்சித்து நாதன் ஸ்மித் எறிந்த பந்து ஓவர் த்ரோவாக எல்லைக் கோட்டைத் தொட்டது. அடுத்த பந்தில் தானாக ஓடிச் சென்று ரன் அவுட் ஆனார் அசலங்க. சென்ற போட்டியில் கமிந்து அவுட் ஆன அதே முறையில். 5 ஓவர் முடிவில் இலங்கை 4 விக்கெட்டுகளை இழந்தது.

அரை சதம் கடந்த கமிந்துவை, முன்னோக்கித் தாவி கேட்ச் பிடித்து அவுட் ஆக்கினார் மிட்செல். அதே ஓவரில் நாதன் ஸ்மித் தனது பங்கிற்கு டீப் தேர்ட் மேன் பகுதியில் சூப்பர் மேன் போல் தாவிப் பிடித்தார்.

சரியான நேரத்தில் துள்ளிக் குதித்து தீக்சானாவை அவுட் ஆக்கினார் மிட்செல். நியூசிலாந்து அணி 113 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. நிறைய சிறப்பான கேட்ச்கள் பிடிக்கப்பட்ட இந்தப் போட்டியில் எளிதான இரண்டு கேட்ச்களைத் தவறவிட்டார் வில் யங்.

3வது ஒருநாள் ஆக்லாந்தில் நடைபெற்றது. இலங்கை பேட்டிங்கை சிறப்பாகத் துவங்கியது. பதும் நிஸங்க காயம் காரணமாக வெளியேறினார். மீண்டும் வந்து பேட்டிங் செய்தார்.

நிஸங்க (66), குசால் மென்டிஸ் (54), மற்றும் லியனாகே (53) அரை சதங்களால் இலங்கை 280 ரன்களைக் குவித்தது. மாட் ஹென்றி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இலங்கை பந்து வீச்சையும் சிறப்பாக செய்தது. நியூசிலாந்து பேட்டர்களை களத்தில் நிற்க அனுமதிக்கவே இல்லை. மார்க் சாப்மேன் மட்டும் 81 ரன்கள் அடித்தார். அஸிதா பெர்ணான்டோ, தீக்சானா, இசான் மலிங்கா தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தி நியூசிலாந்தை 150 ரன்களுக்கு சுருட்டினர்.

போட்டித் துணுக்குகள் 1

தென்னாப்பிரிக்கா – பாகிஸ்தான், 2வது டெஸ்ட் - ஜனவரி 3-7

- ✓ 18 ஆண்டு 272 நாட்கள் வயதான கவீனா மபகா தென்னாப்பிரிக்கா அணியில் அறிமுகம் ஆனார். தென்னாப்பிரிக்க டெஸ்ட் அணியில் அறிமுகமான இளம் வீரர் ஆவார். அவரது முதல் டெஸ்ட் விக்கெட் பாபர் அசாம்.

- ✓ தென்னாப்பிரிக்கா அணியின் ரியான் ரிக்கெல்டன் 259 ரன்களைக் குவித்தார். இது இவரது இரண்டாவது டெஸ்ட் சதம்.
- ✓ தென்னாப்பிரிக்கா அணிக் கேப்டன் பவுமா (106), விக்கெட் கீப்பர் கைல் வெறின்னே (100) சதமடித்தனர். இருவருக்கும் இது 4வது டெஸ்ட் சதமாகும்.
- ✓ முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணியின் விக்கெட் கீப்பர் முகமது ரிஸ்வான் 6 கேட்ச்களைப் பிடித்தார்.
- ✓ முதல் இன்னிங்சில் 7-வது ஓவரில் பீல்டிங் செய்யும் போது காயமடைந்தார் சைம் அயூப். காயம் பெரிய அளவில் என்பதால் போட்டியில் தொடரவில்லை. இதனால் பாகிஸ்தான் அணிக்குத் துவக்க வீரர் மற்றும் பகுதி நேர சுழற்பந்து வீச்சாளர் இழப்பு ஏற்பட்டது.

- ✓ இரண்டாவது இன்னிங்ஸில் தென்னாப்பிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் ரபாடா மற்றும் சுழற்பந்து வீச்சாளர் கேசவ் மகராஜ் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.
- ✓ முதல் இன்னிங்சில் பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் முகமது அப்பாஸ் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் சல்மான் அகா தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.
- ✓ இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் முதல் விக்கெட் பார்ட்னர்ஷிப்பாக 205 ரன்கள் அடித்தது. பாலோ ஆன் ஆன அணி அடித்த அதிக பட்ச முதல் விக்கெட் பார்ட்னர்ஷிப் இது. (ஷான் மசூத் 102 , பாபர் அசாம் 81)

- ✓ பாகிஸ்தான் கேப்டன் ஷான் மசூத் இரண்டாவது இன்னிங்ஸில் 145 ரன்கள் அடித்தார். இது அவருக்கு 6-வது சதம். இதன் மூலம் தென்னாப்பிரிக்காவில் சதமடித்த முதல் பாகிஸ்தான் டெஸ்ட் கேப்டன் ஆனார்.

டெஸ்ட் தி பெஸ்ட்

ஐசிசி தர வரிசை

அணிகள்		
1	ஆஸ்திரேலியா	126
2	தென் ஆப்பிரிக்கா	114
3	இந்தியா	109
4	இங்கிலாந்து	105
5	நியூஸிலாந்து	97
6	இலங்கை	87
7	பாகிஸ்தான்	80
8	வெஸ்ட் இண்டீஸ்	76
9	பங்களாதேஷ்	65
10	அயர்லாந்து	26

பந்து வீச்சாளர்		
ஜஸ்பிரிட் பும்ரா	இந்தி	908
பாட் கம்மின்ஸ்	ஆஸி	841
ககிஸோ ரபாடா	தெ ஆ	837
ஜோஷ் ஹசல்வுட்	ஆஸி	835
நோமன் அலி	பாக்	806
மார்கோ யென்சென்	தெ ஆ	785
மாட் ஹென்றி	நியூஸி	782
நாதன் லைன்	ஆஸி	774
பிரபாத் ஜெயசூர்யா	இலங்	768
ரவிந்திர ஜடேஜா	இந்தி	745

பேட்ஸ்மேன்			
1	ஜோ ரூட்	இங்கி	895
2	ஹாரி புரூக்	இங்கி	876
3	கேன் வில்லியம்சன்	நியூஸி	867
4	யெஜெஸ்வி ஜெய்ஸ்வால்	இந்தி	847
5	டிராவிஸ் ஹெட்	ஆஸி	772
6	டெம்பா பவுமா	தெ ஆ	769
7	கமிந்து மெண்டிஸ்	இலங்	759
8	ஸ்டீவன் ஸ்மித்	ஆஸி	746
9	ரிசப் பண்ட்	இந்தி	739
10	சவுத் ஷகீல்	பாக்	739

ஆல் ரவுண்டர்		
ரவிந்திர ஜடேஜா	இந்தி	400
மார்கோ யென்சென்	தெ ஆ	294
மெஹிதி ஹசன்	பங்க	284
பாட் கம்மின்ஸ்	ஆஸி	282
ஷகீப் அல் ஹசன்	பங்க	263
ஜேசன் ஹோல்டர்	வெ இ	249
ஜோ ரூட்	இங்கி	247
கஸ் அட்கின்சன்	இங்கி	240
பென் ஸ்டோக்ஸ்	இங்கி	235
கிறிஸ் ஒக்ஸ்	இங்கி	225

உள்ளூராட்டம்

மேஜஸ்டிக் டிராபி சீனியர்கள் சீசன் 3 திருநெல்வேலியில் ரெட்டியார்பட்டி (முத்தூர்) கேம்பிரிட்ஜ் மைதானத்தில் நடைபெற்றது.

ஜனவரி 11 முதல் 15 வரை நடந்த இந்தத் தொடரில் 15 அணிகள் பங்கேற்றன. முக்கியமான விதிமுறை வீரர்கள் அனைவரும் 40 வயதை எட்டியவர்களாக இருக்க வேண்டும் என்பது.

ஏ பிரிவில் 11 ஸ்டார் கிரிக்கெட் கிளப், திருவனந்தபுரம் ராயல்ஸ், நியூஸ்டார் கிரிக்கெட் அகடமி அணிகளும் ,

பி பிரிவில் மேஜஸ்டிக் கிரிக்கெட் கிளப், புளூஸ்டார், டிராபி பைட்டர்ஸ் புதுக்கோட்டை அணிகளும்,

சி பிரிவில் 30+ கிரிக்கெட் கிளப் நெல்லை, ரெயின்போ கிரிக்கெட் கிளப், கோல்டு ஸ்டார் 40+ அணிகளும்,

டி பிரிவில் மருத விநாயகர், உதய அலைகள், தி. நகர் 40+ அணிகளும்,

ஈ பிரிவில் சூப்பர் கிங்ஸ் பேரன்ட்ஸ், நெல்மா 40+, மேஜஸ்டிக் சீனியர்ஸ் நெல்லை அணிகளும் பங்கேற்றன.

லீக் சுற்று முடிவில் ரன் ரேட் அடிப்படையில் முதல் நான்கு இடங்களைப் பிடித்த அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின.

அரை இறுதி 1

மருத விநாயகர் - 173/3

சரவணன் - 51*

முத்து மாலை - 1/33

சூப்பர் கிங்ஸ் பேரன்ட்ஸ் - 104/8

போஸ் -26

கார்த்திகேயன் - 2/10

போட்டி முடிந்த பிறகு மருத விநாயகர் அணியில் மூன்று வீரர்கள் 40 வயதுக்கு உட்பட்டோர் எனத் தெரியவந்ததால், போட்டி நிர்வாகம் மருத விநாயகர் அணியின் வெற்றி செல்லாது என அறிவித்தது. சூப்பர் கிங்ஸ் பேரன்ட்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

அரை இறுதி 2

11 ஸ்டார் கிரிக்கெட் கிளப் - 128/7

விஜய் - 54

நவமணி - 2/25

30+ கிரிக்கெட் கிளப் நெல்லை - 128

கணேஷ் - 40

கார்த்திக் - 3/26

ஆட்டம் டை

சூப்பர் ஓவர்

30+ கிரிக்கெட் கிளப் நெல்லை - 8/0

11 ஸ்டார் கிரிக்கெட் கிளப் - 11/0

சூப்பர் ஓவரில் 11 ஸ்டார் கிரிக்கெட் அணி வெற்றி

ஆட்டநாயகன் - கார்த்திக் - 3/26

இறுதிப் போட்டி

இறுதிப் போட்டி 15 ஓவர்களாக குறைக்கப்பட்டது. முதலில் பேட்டிங் செய்த சூப்பர் கிங்ஸ் பேரன்ட்ஸ் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து 10.4 ஓவர்களில் 38 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

சேஸ் செய்த 11 ஸ்டார் கிரிக்கெட் அணி, முதல் ஓவரிலே சூப்பர் கிங்ஸ் பேரன்ட்ஸ் அணியின் ஸ்ட்ரைக் பவுலர் ஆறுமுகம் பந்துவீச்சை நாலாபுறமும் விளாசியது. அந்த ஓவரில் 3 ஃபோர்கள் மற்றும் 2 சிக்ஸர்கள் உட்பட 24 ரன்கள் போனது.

2.4 ஓவர்களில் 11 ஸ்டார் கிரிக்கெட் அணி எளிதாக வென்றது.

சூப்பர் கிங்ஸ் பேரன்ட்ஸ் - 38

போஸ் - 10

கார்த்திக் - 4/7

11 ஸ்டார் கிரிக்கெட் - 44/1

எஸ்ஏஜே - 28

பாரதி - 1/6

11 ஸ்டார் கிரிக்கெட் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி.

ஆட்டநாயகன் - கார்த்திக் - 4/7

சாதனை

டி20 போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பந்து வீச்சாளர் ஆனார் ஆப்கானிஸ்தானின் ரஷீத்கான். 631 விக்கெட்டுகளை எடுத்திருந்த வெயின் பிராவோவின் சாதனையை முறியடித்தார் ரஷீத்கான்.

சாதனைத் துளிகள்

டெஸ்ட் போட்டிகளில் அதிக ரன்கள் அடித்த வீரர்கள்

வரிசை எண்	வீரர்	அணி	போட்டிகள்	இன்னிங்ஸ்	மொத்த ரன்கள்	சதம்	அரை சதம்
1	சச்சின் டெண்டுல்கர்	இந்தியா	200	329	15921	51	68
2	ரிக்கி பாண்டிங்	ஆஸ்திரேலியா	168	287	13378	41	62
3	ஜாக் காலிஸ்	தென் ஆப்பிரிக்கா / ஐசிசி	166	280	13289	45	58
4	ராகுல் டிராவிட்	இந்தியா / ஐசிசி	164	286	13288	36	63
5	ஜோ ரூட்	இங்கிலாந்து	152	278	12972	36	65
6	அலிஸ்டர் குக்	இங்கிலாந்து	161	291	12472	33	57
7	குமார் சங்கக்கார	இலங்கை	134	233	12400	38	52
8	பிரையன் லாரா	வெஸ்ட் இண்டீஸ் / ஐசிசி	131	232	11953	34	48
9	சிவ்நரைன் சந்தர்பால்	வெஸ்ட் இண்டீஸ்	164	280	11867	30	66
10	மகேள ஜெயவர்த்தனே	இலங்கை	149	252	11814	34	50
14	***ஸ்டீவ் ஸ்மித்***	***ஆஸ்திரேலியா***	***115***	***205***	***10140***	***35***	***41***

கொஞ்சம் கிரிக்கெட் நிறைய நினைவுகள்

என்னதான் திருநெல்வேலிகாரன் என்றாலும் திருநெல்வேலி மைதானத்தில் ஒரு ரஞ்சிப் போட்டியோ, ஒரு தமிழ் நாடு பிரிமியர் லீக் போட்டியோ நான் பார்த்ததது இல்லை. நான் சென்னை சேப்பாக்கம் மைதானத்திற்கு ஒரு முறை சென்றிருக்கிறேன். சாம்பியன்ஸ் லீக் தொடர் நடந்த போது 2011 செப்டம்பரில்.

ஒரு நாளில் அடுத்தடுத்து இரண்டு போட்டிகளில் நடந்தது. டிக்கெட் விலை வரிகள் உட்பட 1200 வந்தது. அருண் தான் ஆன்லைனில் புக் பண்ணியது. நான், அருண் மற்ற இரண்டு பேர் சின்ன தினேஷ் & ராஜ்குமாராக இருக்க வாய்ப்பு.



4 மணி போட்டிக்கு 2 மணிக்கே மைதானத்திற்கு சென்று விட்டோம். மைதானத்திற்கு வெளியே முகத்தில் வண்ணம் அடிப்பவர், கொடி விற்பவர், டி சர்ட் விற்பவர் என நிறைய கூட்டம். முதலிலே சென்றதால் தடுப்பு கம்பிக்கு அருகில் இருக்கும் முதல் இருக்கையில் அமர்ந்து கொண்டோம்.

முதல் போட்டி ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மற்றும் தென்னாப்பிரிக்காவின் கேப் கோப்ராஸ் அணிக்கு இடையே நடந்தது. வீரர்கள் பயிற்சியில் இருந்தனர். எங்களுக்கு அடையாளம் தெரிந்த வீரர்கள் டேவிட் வார்னர் மற்றும் ஸ்டீவன் ஸ்மித். பாட் கம்மின்ஸ் மற்றும் மிட்செல் ஸ்டார்க் அதே போட்டியில் ஆடினர்.

நியூ சவுத் வேல்ஸ் முதலில் பேட்டிங் செய்தது. நாங்கள் உட்கார்ந்து இருந்தது மிட் விக்கெட் திசையில். ஆஃப் சைட் என்றால் டீப் பாயிண்ட், டீப் கவர் இடையில். முதல் போட்டியில் நாங்கள் இருந்த இடத்திற்கு முன்பாக பீல்டிங் செய்தவர் ஜஸ்டின் ஆன்டாங். ஆஃப் சைட் ஆகும் போது முன்னால் சென்று விடுவார். நேரம் ஆக ஆக டேய், ஆன்டாங் திரும்பி பார்டா என்று கத்த ஆரம்பித்து விட்டனர்.

சேப்பாக்கம் மைதானம் கடற்கரை அருகில் இருந்தாலும் மைதானத்திற்குள் காத்தோட்டம் சுத்தமாக இல்லை. நேரமாக ஆக புழுக்கம் கூடியது. தண்ணீர் பாட்டிலோ, குளிர்பானமோ, சிற்றுண்டியோ சாமானியன் வாங்கும் விலையில் இல்லை.

இரண்டாவது போட்டியில் சூப்பர் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் ஆடின. மும்பை அணி முதலில் பீல்டிங் செய்தது. சின்னப் பையன் சகால் மற்றும் பொல்லார்ட் எங்களுக்கு அருகில் பீல்டிங் செய்தார்கள். அவர்களுக்கு தண்ணீர் கொடுக்கும், டவல் கொடுக்கும் வேலையில் மும்முரமாக இருந்தார் பீல்டிங் கோச் ஜான்டி ரோட்ஸ். எத்தனை முறை ஜான்டி என்று கத்தினாலும் இன்முகத்துடன் கைகளை ஆட்டினார்.

நாங்கள் எதிர்பார்த்து சென்ற சச்சின் டெண்டுல்கர் (அவர் ஆடவில்லை அணியோடு வந்திருந்தார்), தோனி இருவரையும் அருகில் பார்க்கவே முடியவில்லை.

சென்னை அணி பீல்டிங்கின் போது ரெய்னா எங்கள் அருகில் பீல்டிங் செய்தார், கைகாட்டி விட்டு போன அடுத்த நொடியில் பொல்லார்ட் கொடுத்த கேட்சை தவறவிட்டார். ப்ராவோ பீல்டிங் செய்யும் போது சின்ன சின்ன டான்ஸ் மூவ்மெண்ட் போட்டார்.

போலிஞ்சர் பீல்டிங் செய்யும் இன்னும் உரக்க கத்துங்கள் என்று காதுக்கு பின்னால் கைவைத்து சைகை காட்டினார். கேமராமேன் ஒருவர் தோளில் கேமராவை சுமந்து கொண்டு எங்கள் அருகில் வருவார், நாங்கள் கத்தினால் நகர்ந்து விடுவார். இதுபோல் 5-6 முறை செய்தார், கடைசி முறை வரும் போது நாங்களே திட்டி அனுப்பிவிட்டோம்.

ரெய்னா விட்ட கேட்ச் பெரிதும் பாதிக்கவில்லை. ஆனால் தோனி தவறவிட்ட ஸ்டம்பிங் சென்னை அணியின் வெற்றிக்கு வில்லனாகியது. ஹர்பஜன் மற்றும் மலிங்கா பேட்டிங்கில் தங்களது திறமையை காட்ட மும்பை அணி போட்டியை வென்றது.

மைதானத்தில் சென்று போட்டியை பார்த்தாலும் டிவியில் பார்க்கும் சுவாரஸ்யம் இல்லை. பசித்த வயிறோடு கடைசி பறக்கும் ரயிலேறி அறைக்கு வந்தோம்.

பிசிசிஐ விருதுகள் - 2025

சிகே நாயுடு வாழ்நாள் சாதனையாளர் விருது - ***சச்சின் டெண்டுல்கர்***
பாலி உம்ரிகர் சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீரர் - ***ஜஸ்பிரிட் பும்ரா***
சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீராங்கனை - ***ஸ்மிருதி மந்தனா***
சிறந்த அறிமுக வீரர் - ***சர்ப்ராஸ் கான்***
சிறந்த அறிமுக வீராங்கனை - ***ஆஷா சோபனா***
ஒருநாள் போட்டிகளில் அதிக ரன்கள் அடித்த வீராங்கனை - ***ஸ்மிருதி மந்தனா***
ஒருநாள் போட்டிகளில் அதிக விக்கெட் எடுத்த வீராங்கனை - ***தீப்தி சர்மா***
சிறப்பு விருது - ***ரவிச்சந்திரன் அஸ்வின்***

ஆப்கானின் அற்புதம்

- *கா. இராமச்சந்திரன்*

ஜிம்பாப்வே சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் அணி இருபது ஓவர் மற்றும் ஒரு நாள் தொடரை வென்றதன் தொடர்ச்சியாக நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியை ட்ரா செய்திருந்ததை சென்ற இதழில் பார்த்தோம்.

இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டி ஜனவரி இரண்டாம் தேதி தொடங்கியது. பிட்ச் முதல் போட்டி போல முழுவதும் பேட்டிங்கிற்கு சாதகமானதாக இல்லை. முதலில் பேட் செய்த ஆப்கானிஸ்தான் அணி, ஜிம்பாப்வே அணி பந்து வீச்சில் 157 ரன்களுக்கு சுருண்டது. ஜிம்பாப்வே தனது முதல் இன்னிங்சில் ரசா மற்றும் எர்வினின் அரை சதங்களால் 243 ரன்கள் எடுத்தனர். முதல் போட்டியில் மூத்த வீரர் ரஷீத் கான் இடம் பெறவில்லை. இரண்டாவது போட்டியில் அணியில் இடம்பெற்று நான்கு விக்கெட்களை வீழ்த்தினார். ஆனாலும் ஜிம்பாப்வே 86 ரன்கள் முன்னிலையில் வலுவாக இருந்தது.

ஆப்கான் தனது இரண்டாவது இன்னிங்ஸில் ரஹ்மத் ஷா மற்றும் இஸ்மத் ஆலமின் சதங்களால் 363 ரன்களைக் குவித்து, 278 ரன்களை ஜிம்பாப்வே அணிக்கு இலக்காக நிர்ணயித்தது. ஆப்கானிய சுழல் மன்னன் ரஷீத் கானின் சுழலில் சிக்கி ஜிம்பாப்வே சின்னாபின்னமானது என்று கூறினால் மிகையாகாது. சீரிய இடைவேளையில் அடுத்தடுத்து விக்கெட்களை இழந்து, கிரேய்க் எர்வின் அரை சதம் அடித்தும் அது ஜிம்பாப்வே அணியை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்லவில்லை .

இன்னிங்ஸ்	ஆப்கானிஸ்தான்	ஜிம்பாப்வே
முதல் இன்னிங்ஸ்	157/10 ரஷித் கான் - 25 சிகந்தர் ரசா - 3/30	243/10 கிரேய்க் எர்வின் - 75 ரஷீத் கான் - 4/94
இரண்டாவது இன்னிங்ஸ்	363/10 ரஹ்மத் ஷா - 139 முஷரபானி - 6/95	205/10 கிரேய்க் எர்வின் - 53 ரஷித் கான் - 7/66

ஆட்ட நாயகன் : ரஷீத் கான்- 4/94 & 7/66

தொடர் நாயகன் : ரஹ்மத் ஷா - 392 ரன்கள்

இந்த வெற்றியின் மூலம் ஆப்கானிஸ்தான் அணி இந்த சுற்றுப்பயணத்தில் மூன்று விதமான தொடர்களையும் கைப்பற்றியுள்ளது. சமீப காலமாக ஆப்கானிஸ்தானின் கிரிக்கெட் அடுத்த கட்டத்திற்குச் சென்று கொண்டிருக்கும் நிலையில் இந்த வெற்றி அவர்களின் வளர்ச்சிக்கு மேலும் ஒரு சான்று. ஒரு நாள் மற்றும் இருபது ஓவர் போட்டிகள் நிறைய விளையாடியுள்ளனர். பல பெரிய அணிகளை வீழ்த்தியுள்ளனர். எனவே அந்த வெற்றியைக் காட்டிலும் இந்த டெஸ்ட் தொடர் வெற்றி அவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. மூத்த வீரர்களும் இளைஞர்களும் பொறுப்பை உணர்ந்து நிதானமாக பெரிய இன்னிங்ஸ் விளையாடியது ஆப்கானிஸ்தானின் அங்கீகாரத்திற்கு மேலும் ஒரு மதிப்பை எட்டியுள்ளது என்று தான் கூற வேண்டும்.

டி20 தி என்டர்டைனர்

ஐசிசி தர வரிசை

அணிகள்		
1	இந்தியா	268
2	ஆஸ்திரேலியா	259
3	இங்கிலாந்து	255
4	வெஸ்ட் இண்டீஸ்	247
5	தென் ஆப்பிரிக்கா	247
6	நியூஸிலாந்து	247
7	பாகிஸ்தான்	236
8	இலங்கை	233
9	பங்களாதேஷ்	229
10	ஆப்கானிஸ்தான்	222

பந்து வீச்சாளர்		
அடில் ரஷீத்	இங்கி	718
அக்கேல் ஹோசைன்	வெ இ	707
வானிந்து ஹசரங்க	இலங்	698
ஆடம் ஸாம்பா	ஆஸி	694
வருண் சக்ரவர்த்தி	இந்தி	679
ஜோப்ரா ஆர்ச்சர்	இங்கி	666
மகீஷ் தீக்ஷானா	இலங்	665
ரஷீத்கான்	ஆப்கா	664
அர்ஸதீப் சிங்	இந்தி	664
ரவி பிஷ்னாய்	இந்தி	659

பேட்ஸ்மேன்			
1	டிராவிஸ் ஹெட்	ஆஸி	855
2	திலக் வர்மா	இந்தி	832
3	பில் சால்ட்	இங்கி	782
4	சூர்யகுமார்	இந்தி	763
5	ஜாஸ் பட்லர்	இங்கி	749
6	பாபர் அசாம்	பாக்	712
7	பதும் நிஸ்சங்க	இலங்	707
8	முகமது ரிஸ்வான்	பாக்	704
9	யெஜெஸ்வி ஜெய்ஸ்வால்	இந்தி	685
10	குஷால் பெரேரா	இலங்	675

ஆல் ரவுண்டர்		
ஹர்திக் பாண்ட்யா	இந்தி	255
திபேந்திர சிங் ஏரீ	நேபாள்	231
லியாம் லிவிங்ஸ்டன்	இங்கி	225
மார்க்கஸ் ஸ்டோய்னிஸ்	ஆஸி	209
முகமது நபி	ஆப்கா	207
வானிந்து ஹசரங்க	இலங்	201
சிக்கந்தர் ரசா	ஜிம்	198
ரோமரியோ ஷெப்பர்ட்	வெ இ	191
ராஸ்டன் சேஸ்	வெ இ	186
கெர்ஹார்ட் யராஸ்மஸ்	நமி	164

அடிபொலி கிரிக்கெட்

பங்களாதேஷ் பிரிமியர் லீக் தொடரில் ஜனவரி 9ம் தேதி பார்சூன் பரிசால் மற்றும் ரங்க்பூர் ரைடர்ஸ் அணிகள் மோதின. பார்சூன் பரிசால் அணி முதலில் பேட்டிங் செய்து 197 ரன்களைக் குவித்தது. சேஸ் செய்த ரங்க்பூர் ரைடர்ஸ் அணி 17 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 156 ரன்கள் எடுத்திருந்தது.

வெற்றி பெற 18 பந்துகளில் 42 ரன்கள் தேவைப்பட்டன. 18வது ஓவரை ஷாகின் அப்ரிடி வீசினார். 3 ரன்களை மட்டுமே கொடுத்து இப்திகார் அகமது விக்கெட்டையும் வீழ்த்தினார்.

19வது ஓவரை ஜக்கந்தாத் கான் வீசினார். முதல் இரண்டு பந்துகளில் சிக்ஸர் போனது. மூன்றாவது பந்தில் குஷ்தில் ஷா அவுட் ஆனார். நான்காவது பந்தை எதிர் கொண்டது மகேதி ஹசன்.

மகேதி பேட்டில் பட்டு எகிறிய பந்தைப் பிடிக்க ஓடினார் ஜக்கந்தாத், எதிர் முனையில் இருந்து ரன் எடுக்க ஓடினார் கேப்டன் நூருல் ஹசன். நூருல் குறுக்கே வந்ததால் பந்தைத் தவறவிட்டார் ஜக்கந்தாத். அம்பயரிடம் முறையிட்டது பீல்டிங் அணி. அம்பயர் எந்திரக் கண்களை உதவிக்கு அழைக்க, நூருல் ஓடிவரும் போது திசை மாற்றியது தெரிய வர, பீல்டிங்கை சீர் குலைத்தார் (obstructing the field) என்ற முறையில் அவுட் ஆனார் மகேதி ஹசன். நூருல் ஹசன் எதிர்முனையில் நிற்க 5வது பந்தில் அவுட்டானார் சைபுதீன். 6வது பந்தில் கம்ருல் ரன் எதுவும் எடுக்கவில்லை.

கடைசி ஓவரில் வெற்றிக்கு 26 ரன்கள் தேவைப்பட்டன. ரிஸாட் ஹோசைன் மற்றும் கைல் மேயர்ஸ்க்கு மட்டுமே ஓவர் மீதி இருந்தது. முதல் ஓவர் பந்து வீசி நான்கு ரன்கள் மட்டுமே கொடுத்த கைல் மேயர் பந்து வீச வந்தார். முதல் பந்து லோ புல்டாசாக அமைய அதை மிட் விக்கெட் திசையில் எல்லைக் கோட்டுக்கு வெளியே அனுப்பினார் நூருல்.

2வது பந்தை லெக் சைடில் வீச அதை பைன் லெக் பகுதியில் போர் அடித்தார். 3வது பந்தும் மோசமான பந்தாக வீசினார் மேயர்ஸ், அதிலும் போர் அடித்தார் மிட் விக்கெட் திசையில், அது கிட்டத்தட்ட சிக்ஸ் போக வேண்டியது.

நூருல் எந்த வித பதட்டமும் இல்லாமல் 4வது பந்தை மிட் விக்கெட் திசையில் பறக்க விட்டார். 2 பந்துகளில் 6 ரன்கள் தேவை என்ற நிலை. 5வது பந்தை கவர் திசையில் எல்லைக் கோட்டை நோக்கி விரட்டினார். கடைசிப் பந்தில் 1 ரன் அடித்தால் சூப்பர் ஓவர் 2 ரன் அடித்தால் வெற்றி. கடைசிப் பந்து சுமாரான ஷார்ட் பாலாக வர மிட் விக்கெட் திசையில் சிக்ஸராக்கினார் நூருல் ஹசன். 7 பந்துகளை மட்டுமே எதிர்கொண்டு 32 ரன்கள் அடித்த நூருல் ஆடியது அடிபொலி கிரிக்கெட்.

பிசிசிஐ விருதுகள் -2025

சிறந்த அம்பயர் - உள்ளூர் போட்டிகள் - ***அக்சய் நோட்ரே***
எம்ஏ சிதம்பரம் விருது அதிக ரன்கள் அடித்த வீராங்கனை (19 வயதுக்கு உட்பட்டோர்) - ***காவ்யா டியோடியா***
எம்ஏ சிதம்பரம் விருது அதிக ரன்கள் அடித்த வீரர் (19 வயதுக்கு உட்பட்டோர்) - ***விஷ்ணு பரத்வாஜ்***
ஜக்மோகன் டால்மியா விருது - சிறந்த வீராங்கனை மூத்தோர் (உள்நாட்டு போட்டிகள்) - ***பிரியா மிஸ்ரா***
ஜக்மோகன் டால்மியா விருது - சிறந்த வீராங்கனை இளையோர் (உள்நாட்டு போட்டிகள்) - ***ஜஸ்வரி அவசாரே***
ஜக்மோகன் டால்மியா விருது - அதிக விக்கெட் எடுத்த வீரர் (16 வயதுக்கு உட்பட்டோர் - விஜய் மெர்சன்ட் தொடர்) - ***ஹெம்சுதேசன் ஜெகந்நாதன்***
ஜக்மோகன் டால்மியா விருது - அதிக ரன்கள் அடித்த வீரர் (16 வயதுக்கு உட்பட்டோர் - விஜய் மெர்சன்ட் தொடர்) - ***லக்ஷயா ராய்சந்தனி***
எம்ஏ சிதம்பரம் விருது - அதிக விக்கெட் எடுத்த வீரர் (23 வயதுக்கு உட்பட்டோர் சிகே நாயுடு தொடர் ப்ளேட் பிரிவு) - ***நெய்ஸேகோ ருப்ரியோ***
எம்ஏ சிதம்பரம் விருது - அதிக ரன்கள் அடித்த வீராங்கனை (23 வயதுக்கு உட்பட்டோர் சிகே நாயுடு தொடர் ப்ளேட் பிரிவு) ***ஹெம் சேத்ரி***
[ம்ஏ சிதம்பரம் விருது அதிக விக்கெட் வீரர் (23 வயதுக்கு உட்பட்டோர் சிகே நாயுடு தொடர் எலைட் பிரிவு) - ***வித்யுத்***
எம்ஏ சிதம்பரம் விருது - அதிக ரன்கள் அடித்த வீரர் (23 வயதுக்கு உட்பட்டோர் சிகே நாயுடு தொடர் எலைட் பிரிவு) - ***அனீஷ்***
[மாதவராவ் சிந்தியா விருது - அதிக விக்கெட் எடுத்த வீரர் (ரஞ்சிக் கோப்பை பிளேட் பிரிவு) - ***டனே தியாகராஜன்***
மாதவராவ் சிந்தியா விருது - அதிக விக்கெட் எடுத்த வீரர் (ரஞ்சிக் கோப்பை எலைட் பிரிவு) - ***சாய் கிஷோர்***
மாதவராவ் சிந்தியா விருது - அதிக ரன்கள் அடித்த வீரர் (ரஞ்சிக் கோப்பை பிளேட் பிரிவு) - ***அக்னி சோப்ரா***
மாதவராவ் சிந்தியா விருது - அதிக ரன்கள் அடித்த வீரர் (ரஞ்சிக் கோப்பை எலைட் பிரிவு) - ***ரிக்கி புய்***
லாலா அமர்நாத் விருது - சிறந்த ஆல்ரவுண்டர் (குறிப்பிட்ட ஓவர் போட்டிகள்) - ***ஷஸாங் சிங்***
லாலா அமர்நாத் விருது - சிறந்த ஆல்ரவுண்டர் (ரஞ்சிக் கோப்பை) - ***தனுஷ் கோடியன்***
உள்நாட்டு போட்டிகள் சிறந்த பங்களிப்பு - ***மும்பை அணி***

சூப்பர் ஸ்மாஷ்

நியூசிலாந்தில் நடைபெறும் பிரிமியர் லீக் போட்டியான சூப்பர் ஸ்மாஷ் தொடர் டிசம்பர் 26 முதல் பிப்ரவரி 2 வரை நடைபெற்றது.

பெரிய அளவில் வெளிநாட்டு வீரர்கள் பங்கேற்கவில்லை. இந்தத் தொடரில் பங்கேற்ற பிரபல வெளிநாட்டு வீரர் நெதர்லாந்தின் லோகன் வான்பீக் மட்டுமே.

அணிகள் - கேப்டன்கள்

ஒட்டகோ - லூக் ஜார்ஜ்சன்

காண்டர்பெர்ரி - கோலே மெக்கொஞ்சி

வெலிங்டன் - நிக் கெல்லி

ஆக்லாந்து - ராபர்ட் ஓ டோனல்

நார்தர்ன் டிஸ்டரிக்ட்ஸ் - ஹீட் ராவல்

சென்ட்ரல் டிஸ்டிரிக்ட்ஸ் - டாம் புரூஸ்

இந்தத் தொடரில் அதிகபட்ச சேஸ் ஜனவரி 9-ல் நடைபெற்ற போட்டியில் சென்ட்ரல் டிஸ்டிரிக்ட்ஸ் அணி வெலிங்டன் அணிக்கு எதிராக 193 ரன்களை சேஸ் செய்து 196 ரன்கள் எடுத்து வென்றது.

மிகக்குறைந்த ரன்கள் வித்தியாசத்தில் வென்ற போட்டி என்றால் ஜனவரி 16-ல் நடைபெற்ற போட்டியில் நார்தர்ன் டிஸ்டரிக்ட்ஸ் அணி 2 விக்கெட் இழப்பிற்கு 212 ரன்களைக் குவித்தது. சேஸ் செய்த ஒட்டகோ அணி 8 விக்கெட் இழப்பிற்கு 204 ரன்களை எடுத்து 8 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றது.

இந்தத் தொடரில் அதிகபட்ச ரன் ஆக்லாந்து அணி 3 விக்கெட் இழப்பிற்கு 215 ரன்கள் அடித்தது. குறைந்தபட்ச ரன்னும் ஆக்லாந்து ஆல்அவுட் ஆன 106 ரன்கள் ஆகும்.

எலிமினேட்டர் - பிப்ரவரி 1 - வெலிங்டன்

நார்த்ரன் டிஸ்டிரிக்ட்ஸ் - 110/9

ஜீட் ராவல் - 45

ஹென்றி ஷிப்லே - 3/17

காண்டர்பெர்ரி - 111/3

மேத்யூ பாய்லே - 48

பெர்கஸ் லெல்மேன் - 2/13

காண்டர்பெர்ரி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி.

ஆட்டநாயகன் -

இறுதிப் போட்டி - பிப்ரவரி 2 - வெலிங்டன்

காண்டர்பெர்ரி - 135/8

டேரில் மிட்செல் - 46

டோபி பைன்ட்லே -3/29

சென்ட்ரல் டிஸ்டிரிக்ட்ஸ் - 136/4

டேன் கிளவர் - 43

கைல் ஜேமிசன் - 2/24

சென்ட்ரல் டிஸ்டிரிக்ட்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி

ஆட்டநாயகன் - டேன் கிளவர் -43

அதிக ரன்கள் அடித்த வீரர்கள்

மேத்யூ பாய்லே - 377

டாம் புரூஸ் - 339

ஜாக் பாய்லே - 285

கடனே கிளார்க் - 282

பெவோன் ஜேக்கப்ஸ் - 263

அதிக விக்கெட் எடுத்த வீரர்கள்

பிளைர் டிக்னர் - 16

டன்ரூ பெர்ன்ஸ் - 14

கைல் ஜேமிசன் - 14

ஜோக் மெக்கன்சி - 13

ஆன்ட்ரூ ஹேசல்ட்லைன் - 13

ஒன்டே தி கிரேட்

ஐசிசி தர வரிசை

அணிகள்		
1	இந்தியா	118
2	ஆஸ்திரேலியா	113
3	பாகிஸ்தான்	111
4	தென் ஆப்பிரிக்கா	102
5	நியூஸிலாந்து	100
6	இலங்கை	97
7	இங்கிலாந்து	93
8	ஆப்கானிஸ்தான்	86
9	பங்களாதேஷ்	81
10	வெஸ்ட் இண்டீஸ்	78

பந்து வீச்சாளர்		
ரஷீத்கான்	ஆப்கா	669
குல்தீப் யாதவ்	இந்தி	665
மகீஷ் தீக்ஷானா	இலங்	663
ஷாகின் அப்ரிடி	பாக்	662
கேசவ் மகராஜ்	தெ ஆ	654
பெர்னார்ட் ஸ்கால்ட்ஷ்	நமி	654
ஜஸ்பிரீட் பும்ரா	இந்தி	645
முகமது சிராஜ்	இந்தி	643
மாட் ஹென்றி	நியூஸி	635
ஆடம் ஸாம்பா	ஆஸி	635

பேட்ஸ்மேன்			
1	பாபர் அசாம்	பாக்	795
2	ரோகித் சர்மா	இந்தி	765
3	சுப்மன் ஹில்	இந்தி	763
4	விராத் கோலி	இந்தி	746
5	ஹென்றிச் கிளாஸ்ஸன்	தெ ஆ	743
6	ஹாரி டெக்டார்	அயர்	737
7	டேரில் மிட்செல்	நியூஸி	699
8	சாய் ஹோப்	வெ இ	672
9	ரஹ்மானுல்லா குர்பாஸ்	ஆப்கா	672
10	பதும் நிஸ்சங்க	இலங்	666

ஆல் ரவுண்டர்		
முகமது நபி	ஆப்கா	300
சிக்கந்தர் ரசா	ஜிம்	290
அஸ்மத்துல்லா ஓமர்ஷாய்	ஆப்கா	268
மெஹிதி ஹசன்	பங்க	255
ரஷீத்கான்	ஆப்கா	247
கெர்ஹார்ட் யராஸ்மஸ்	நமி	245
ப்ரெண்டன் மேக்முலன்	ஸ்காட்	240
க்ளன் மேக்ஸ்வெல்	ஆஸி	233
மிட்செல் சாண்ட்னர்	நியூஸி	228
ஸீஷன் மக்சூத்	ஓமன்	204

அழகு மசாலா

An Initiative of a Group of Woman

fssai
22424031000208

Home Made PRODUCT

NO
Artificial flavors
Preservatives
Added colors

விலைப்பட்டியல்

(1 கிலோ)	MRP	புதிய விலை
மஞ்சள் தூள்	ரூ.400	ரூ.300
தனி மிளகாய் தூள்	ரூ.500	ரூ.350
மல்லி தூள்	ரூ.350	ரூ.250
குழம்பு மிளகாய் தூள்	ரூ.400	ரூ.320
ரசப்பொடி	ரூ.700	ரூ.550
சாம்பார் பொடி	ரூ.440	ரூ.350
பிரியாணி மசாலா	ரூ.850	ரூ.700
கரம் மசாலா	ரூ.750	ரூ.600

For Orders
888 30 29 301
Taste Made for you!

அனைத்து மசாலாக்களும் 50 கிராம் முதல் 1 கிலோ பேக்குகள் வரை கிடைக்கும்.

Page : 01

அழகு மசாலா

An Initiative of a Group of Woman

fssai
22424031000208

Home Made PRODUCT

NO
Artificial flavors
Preservatives
Added colors

விலைப்பட்டியல்

(இட்லி பொடி வகைகள்)

(1 கிலோ)	MRP	புதிய விலை
இட்லி பொடி	ரூ.350	ரூ.300
சென்னாகுன்னி பொடி	ரூ.800	ரூ.600
கருவேப்பிலை பொடி	ரூ.550	ரூ.450

Rice Mix

பருப்பு சாதம் பொடி	ரூ.600	ரூ.400

For Orders
888 30 29 301
Taste Made for you!

அனைத்து மசாலாக்களும் 50 கிராம் முதல் 1 கிலோ பேக்குகள் வரை கிடைக்கும்.

Page : 02

இளையோர் மகளிர் டி20 உலகக் கோப்பை

16 அணிகள் பங்கேற்ற இளையோர் மகளிர் டி20 உலகக் கோப்பை மலேசியாவில் நடைபெற்றது. மலேசியா என்றதும் சச்சின் டெண்டுல்கர் 140 ரன்கள் அடித்த அந்த மைதானத்திலா என்று உங்களுக்குக் கேள்விகள் வரலாம்.

ஆனால் அந்த மைதானத்தில் இப்போது போட்டிகள் நடைபெறுவது இல்லை. இந்தத் தொடர் கோலாலம்பூர், பங்கி, ஜோகூர் மற்றும் குச்சிங் நகரங்களில் நடைபெற்றது.

ஏ பிரிவில் இந்தியா, இலங்கை, வெஸ்ட் இண்டீஸ் மற்றும் மலேசியா அணிகள் பங்கேற்றன. மலேசிய அணி மூன்று போட்டிகளிலும் தோற்று வெளியேறியது.

பி பிரிவில் இங்கிலாந்து, அமெரிக்கா, அயர்லாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் பங்கேற்றன. பாகிஸ்தான் - அமெரிக்கா போட்டி மழையால் கைவிடப்பட்டது. பாகிஸ்தான் அணி அயர்லாந்து மற்றும் இங்கிலாந்திடம் தோற்று வெளியேறியது.

சி பிரிவில் தென்னாப்பிரிக்கா, நைஜீரியா, நியூசிலாந்து மற்றும் சமோவா அணிகள் பங்கேற்றன. சமோவா அணி வெளியேறியது. நைஜீரியா அணி நியூசிலாந்து அணியை வென்றது குறிப்பிடத்தக்கது.

டி பிரிவில் ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், ஸ்காட்லாந்து மற்றும் நேபாள் அணிகள் பங்கேற்றன. நேபாள் அணி மூன்று போட்டிகளிலும் தோற்று வெளியேறியது.

லீக் சுற்றில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த அணிகள் சூப்பர் சிக்ஸ் சுற்றில் ஆடின. சூப்பர் சிக்ஸ் சுற்று இரண்டு பிரிவாக நடத்தப்பட்டது. முதல் இடம் பிடித்த அணி மற்றொரு பிரிவில் 2வது, 3வது இடம் பிடித்த அணிகளுடன் மோதும் படி போட்டிகள் நடந்தன. இதனால் சூப்பர் சிக்ஸ் சுற்று பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. லீக் சுற்றில் முதல் இடம் பிடித்த அணிகளே அரையிறுதிக்குச் சென்றன.

முதல் அரையிறுதி - ஜனவரி 31 - கோலாலம்பூர்

ஆஸ்திரேலியா முதலில் பேட்டிங் செய்தது. தென்னாப்பிரிக்க இடதுகை சுழற்பந்து வீச்சாளர் ஆஷ்லே வான் விக் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 8 விக்கெட் இழப்பிற்கு 105 ரன்களை எடுத்தது.

தென்னாப்பிரிக்கா 5 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து சேஸ் செய்தது.

ஆஸ்திரேலியா - 105/8

கயோம் ஹே பிரே - 36

ஆஷ்லே வான் விக் - 4/17

தென்னாப்பிரிக்கா - 106/5

ஜெம்மா போத்தா- 37

லூஸி ஹாமில்டன் - 2/17

தென்னாப்பிரிக்கா 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி.

ஆட்டநாயகி - ஆஷ்லே வான் விக் - 4/17

அரையிறுதி 2 - ஜனவரி 31 - கோலாலம்பூர்

இங்கிலாந்து அணி முதலில் பேட்டிங் செய்தது. துவக்க வீராங்கனை டவீனா பெர்ரின் 45 ரன்கள் அடித்தார். இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் இங்கிலாந்து அணியை 118 ரன்களே எடுக்க விட்டனர்.

இந்திய அணி துவக்க வீராங்கனை கமாலினி அரைசதத்தால் 9 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

இங்கிலாந்து - 113/8

டவீனா பெர்ரின் - 45

பருனிகா சிஸோடியா - 3/21

இந்தியா - 117/1

கமாலினி - 56*

போஃபே பிரட் - 1/30

இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி

ஆட்ட நாயகி - பருனிகா சிஸோடியா - 3/21

இறுதிப் போட்டி

இறுதிப் போட்டியில் இந்தியா - தென்னாப்பிரிக்கா அணிகள் மோதின. அரையிறுதியில் சேஸ் செய்த அணிகளே வென்ற போதிலும் தென்னாப்பிரிக்கா பேட்டிங்கைத் தேர்வு செய்தது.

முதல் ஓவரில் 10 ரன்கள் அடித்தாலும் இரண்டாவது ஓவரில் விக்கெட்டை இழந்தது தென்னாப்பிரிக்கா. இந்திய சுழற்பந்து வீச்சாளர்களின் கை ஓங்கி இருந்ததால் தென்னாப்பிரிக்கா பெரிய அளவில் ரன் குவிக்க முடியவில்லை. சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்து 82 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

இந்திய நம்பிக்கை நட்சத்திரம் கொங்கடி த்ரிஷா ஆரம்பம் முதலே அடித்தாட 9 விக்கெட் வித்தியாசத்தில் எளிதாக வென்று கோப்பையைக் கைப்பற்றியது இந்தியா.

தென்னாப்பிரிக்கா - 82

மியாகே வான் ரோஸ்ட் -23

கொங்கடி த்ரிஷா -3/15

இந்தியா -84/1

கொங்கடி த்ரிஷா -44

கெய்லா ரெய்னேகே - 1/14

இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி

ஆட்ட நாயகி - கொங்கடி த்ரிஷா -3/15 & 44

அதிக ரன்கள் அடித்த வீரர்கள்

கொங்கடி த்ரிஷா - 309

டவீனா பெர்ரின் - 176

கமாலினி - 143

கயோம் ஹே பிரே - 119

ஜெம்மா போத்தா - 105

அதிக விக்கெட் எடுத்த வீரர்கள்

வைஷ்ணவி சர்மா - 17

ஆயுஷி சுக்லா - 14

கெய்லா ரெய்னேகே - 11

பருனிகா சிஸோடியா - 10

ஹஸ்ரத் கில் - 10

சகோதரக் கிரிக்கெட்

இடது கை பேட்ஸ்மேன்	**பேட்டிங்**	வலது கை பேட்ஸ்மேன்
இடது கை மித வேகம்	**பந்துவீச்சு**	வலது கை ஆஃப் ஸ்பின்
173	**போட்டிகள்**	79
2821	**ரன்கள்**	1046
301	**விக்கெட்டுகள்**	46
13	**ஆட்டநாயகன்**	4
முதல் ஓவரில் ஹாட்ரிக் எடுத்தது	**சாதனை**	உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் அறிமுகம் ஆனது
நடிகர்	**கிரிக்கெட்டுக்கு வெளியே**	நாடாளுமன்ற உறுப்பினர்
சன்ரைசர்ஸ் ஹைதராபாத் ரைசிங் பூனே சூப்பர் ஜெயின்ட்ஸ் கிங்ஸ் 11 பஞ்சாப் டெல்லி டேர்டெவில்ஸ் குஜராத் லயன்ஸ்	**ஐபிஎல் அணிகள்**	ராஜஸ்தான் ராயல்ஸ் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் கொல்கத்தா நைட்ரைடர்ஸ்

2009ல் இலங்கையில் நடைபெற்ற டி20 போட்டியில் இந்திய அணி 174 ரன்களை சேஸ் செய்தது. 115 ரன்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. பதான் சகோதரர்கள் 25 பந்துகளில் 59 ரன்கள் பார்ட்னர்ஷிப் போட்டு இந்திய அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தனர்.
இர்பான் பதான் - 33* (16) 2X4 & 2X6
யூசுப் பதான் - 22* (10) 1X4 & 2X6

டெஸ்ட் போட்டி முடிவுகள்					
ஆடிய அணிகள்		மைதானம்	தேதி	வென்ற அணி	ஆட்டநாயகன்
ஆப்கானிஸ்தான்	ஜிம்பாப்வே	புலவாயோ	ஜனவரி 02 - 06	ஆப்கானிஸ்தான்	ரஷீத்கான்
157 & 363	243 & 205			72 ரன்கள்	25, 4/94, 23 & 7/66
இந்தியா	ஆஸ்திரேலியா	சிட்னி	ஜனவரி 03 - 07	ஆஸ்திரேலியா	ஸ்காட் போலண்ட்
185 & 157	181 & 162/4			6 விக்கெட்	4/31 & 6/45
தென் ஆப்பிரிக்கா	பாகிஸ்தான்	கேப்டவுன்	ஜனவரி 03 - 07	தென் ஆப்பிரிக்கா	ரியான் ரிக்கெல்டன்
615 & 58/0	194 & 478			10 விக்கெட்	259
பாகிஸ்தான்	வெஸ்ட் இண்டீஸ்	முல்தான்	ஜனவரி 17-21	பாகிஸ்தான்	சஜித் கான்
230 & 157	137 & 123			127 ரன்கள்	4/65 & 5/50
வெஸ்ட் இண்டீஸ்	பாகிஸ்தான்	முல்தான்	ஜனவரி 25-29	வெஸ்ட் இண்டீஸ்	ஜோயல் வாரிக்கான்
163 & 244	154 & 133			120 ரன்கள்	36*, 4/43 & 5/27
ஆஸ்திரேலியா	இலங்கை	காலி	ஜனவரி 29 - பிப்ரவரி 2	ஆஸ்திரேலியா	உஸ்மான் கவாஜா
654/6	165 & 247			இன்னிங்ஸ் & 122 ரன்கள்	232

டி20 போட்டி முடிவுகள்*					
ஆடிய அணிகள்		மைதானம்	தேதி	வென்ற அணி	ஆட்டநாயகன்
இலங்கை	நியூஸிலாந்து	நெல்சன்	ஜனவரி 02	இலங்கை	குஷால் பெரீரா
218/5	211/7			7 ரன்கள்	101
இங்கிலாந்து	இந்தியா	கொல்கத்தா	ஜனவரி 22	இந்தியா	வருண் சக்ரவர்த்தி
132	133/3			7 விக்கெட்	3/23
இங்கிலாந்து	இந்தியா	சென்னை	ஜனவரி 25	இந்தியா	திலக் வர்மா
165/9	166/8			2 விக்கெட்	72* & 3 கேட்ச்
இங்கிலாந்து	இந்தியா	ராஜ்கோட்	ஜனவரி 28	இங்கிலாந்து	வருண் சக்ரவர்த்தி
171/9	145/9			26 ரன்கள்	5/24
இந்தியா	இங்கிலாந்து	புனே	ஜனவரி 31	இந்தியா	சிவம் துபே
181/9	166			15 ரன்கள்	53

*முக்கிய அணிகளின் போட்டி மட்டுமே தரப்பட்டுள்ளது

அபிஷேக் சர்மாவின் அதிரடி சதம் அடுத்த இதழில்

ஒரு நாள் போட்டி முடிவுகள்					
ஆடிய அணிகள்		மைதானம்	தேதி	வென்ற அணி	ஆட்டநாயகன்
இலங்கை	நியூஸிலாந்து	வெலிங்டன்	ஜனவரி 05	நியூஸிலாந்து	மாட் ஹென்றி
178	180/1			9 விக்கெட்	4/19
நியூஸிலாந்து	இலங்கை	ஹாமில்டன்	ஜனவரி 08	நியூஸிலாந்து	ரச்சின் ரவீந்திரா
255/9	142			113 ரன்கள்	79
இலங்கை	நியூஸிலாந்து	ஆக்லாந்து	ஜனவரி 11	இலங்கை	அஸிதா பெர்னாண்டோ
290/8	150			140 ரன்கள்	3/16

சுழலுக்கு சுழல்

பாகிஸ்தான் பேட்டிங்கிற்கு சாதகமான ஆடுகளங்களைத் தயார் செய்து பார்த்தது. பெரிய அளவில் வெற்றி இல்லை. வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களைத் தயார் செய்தது, அதிலும் பெரிய வெற்றி இல்லை. இந்நிலையில் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களைத் தயார் செய்தது. அதில் ஓரளவு வெற்றி கிடைக்க வெஸ்ட் இண்டீஸ் தொடருக்கும் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்களைத் தயார் செய்தது.

லாகூர், ராவல்பிண்டி, கராச்சி மைதானங்களில் சாம்பியன்ஸ் டிராபி நடைபெற இருப்பதால் இரண்டு டெஸ்ட் போட்டிகளும் முல்தானில் நடைபெற்றன.

முதல் டெஸ்டில் பாகிஸ்தான் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்தது. வெஸ்ட் இண்டீஸ் இடதுகை சுழற்பந்து வீச்சாளர் குடகேஷ் மோட்டியை வைத்து பந்துவீச்சைத் துவக்கியது. பாகிஸ்தான் ஒரு கட்டத்தில் 46 ரன்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தது.

ஷகீல் (84), ரிஸ்வான் (71) அரை சதங்களால் மீண்டு 230 ரன்களைக் குவித்தது. வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் ஜெய்டன் ஸீல்ஸ் மற்றும் ஜோமல் வாரிக்கன் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

பாகிஸ்தான் சஜித் கானை வைத்து பந்து வீச்சைத் துவக்கியது. வெஸ்ட் இண்டீஸ் 51 ரன்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்தது. இறுதிக்கட்ட வீரர்கள் மோட்டி - 19, ஸீல்ஸ் - 22, வாரிக்கன் - 31*, என அடிக்க உதிரிகள் -22 கிடைக்க 137 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. பாகிஸ்தான் தரப்பில் வேகப்பந்து குர்ரம் ஷஷாத் வீசிய ஒரு ஓவர் மட்டுமே. சஜித் 4 விக்கெட்டுகளையும் நோமன் அலி 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பாகிஸ்தானின் இரண்டாவது இன்னிங்ஸில் கேப்டன் ஷான் மசூத் (52) தவிர யாரும் பெரிதாக ஆடவில்லை. 159 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. வாரிக்கன் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

251 என்ற இலக்கைத் துரத்திய வெஸ்ட் இண்டீஸ் 123 ரன்கள் மட்டுமே எடுத்தது. அலிக் அதானஸே 55 ரன்கள் எடுத்தது மட்டுமே ஆறுதல். பாகிஸ்தான் தரப்பில் சஜித் கான் 5 விக்கெட்டுகளையும், அப்ரார் அகமது 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பாகிஸ்தான் அணி 127 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

9 விக்கெட்டுகளை எடுத்த சஜித் கான் ஆட்டநாயகன் ஆனார். இந்த டெஸ்டில் பாகிஸ்தான் தரப்பில் துவக்க வீரர் முகமது குர்ரைரா, வெஸ்ட் இண்டீஸ் தரப்பில் விக்கெட் கீப்பர் டெவின் இம்லாக் அறிமுகம் ஆனார்கள்.

இரண்டாவது டெஸ்டில் வெஸ்ட் இண்டீஸ் டாஸ் வென்று பேட்டிங் செய்தது. 54 ரன்களுக்கே 8 விக்கெட்டுகளை இழந்தது. மோட்டி (55), ரோச் (25), வாரிக்கன் (36*) என அடிக்க 163 ரன்கள் எடுத்தது. நோமன் அலி 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

பாகிஸ்தானும் சுழற்பந்து வீச்சுக்குப் பலியானது. 154 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அதிக பட்சமாக ரிஸ்வான் 49 ரன்கள் அடித்தார். வாரிக்கன் 4, மோட்டி 3, ரோச் 2 என விக்கெட்டுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

வெஸ்ட் இண்டீஸ் அணியின் இரண்டாவது இன்னிங்ஸில் வெஸ்ட் இண்டீஸ் கேப்டன் பிராத்வெயிட் 52 ரன்கள் அடித்தார். இந்த முறை இறுதிக்கட்ட வீரர்கள் காப்பாற்றவில்லை. வெஸ்ட் இண்டீஸ் 244 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. சஜித், நோமன் தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

254 என்ற கடின இலக்கைத் துரத்தியது பாகிஸ்தான். மோட்டி 2, கெவின் சிங்க்ளேர் 3, ஜோமல் வாரிக்கன் 5 என விக்கெட்டுகளைக் கைப்பற்ற பாகிஸ்தான் அணி 133 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அதிக பட்சமாக பாபர் 31 ரன்கள் அடித்தார்.

கிட்டத்தட்ட முதல் டெஸ்ட் போல நடந்த இரண்டாவது டெஸ்ட்டில் வெஸ்ட் இண்டீஸ் 120 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது. 9 விக்கெட்டுகளை வீழ்த்திய ஜோமல் வாரிக்கன் ஆட்டநாயகன் ஆனார். இந்த டெஸ்டில் பாகிஸ்தான் அணியில் வேகப்பந்து வீச்சாளர் காஷிப் அலி, வெஸ்ட் இண்டீஸ் அணியில் டாப் ஆர்டர் பேட்டர் அமீர் ஜாங்கே அறிமுகம் ஆனார்கள்.

இம்பாக்ட் ப்ளேயர்

ஜெஸி ரைடர் என்றதும் உப்பிய கன்னங்கள், கொழு கொழு உடம்போடு நியூசிலாந்து வீரர் உங்கள் நினைவிற்கு வரலாம். இந்தியர்கள் பலரின் நினைவில் இருப்பார். அவரைப்பற்றிப் பார்ப்போமா....

ஜெஸி ரைடரின் பெற்றோர்கள் பிரிந்து விட்டதால் தனது பதின்ம வயதில் நண்பர்களின் வீடுகளில், அவர்களது அரவணைப்பில் வளர்ந்தவர். 2002ம் ஆண்டு இளையோர் உலகக் கோப்பையில் சிறப்பாக ஆடினார் ரைடர்.

2008ல் தேர்வுக் குழுத் தலைவர் ரிச்சர்ட் ஹாட்லி கொண்ட நம்பிக்கையால் தேசிய அணிக்குத் தேர்வானார். ஆனாலும் நியூசிலாந்தின் முன்னாள் வீரர் ஆடம் பரோர், ரைடர் குண்டாக இருக்கிறார், உடல் தகுதி இல்லாதவர் என்று விமர்சனம் செய்தார்.

ஜெஸி ரைடர் நியூசிலாந்து அணிக்கு வந்த பிறகு இரண்டு முகங்கள் காட்டினார். ஒன்று பரோர் முகத்தில் கரியைப் பூசியது. ஆம், ரைடர் அதிரடியான துவக்க வீரர், மித வேகப் பந்து வீச்சாளர், சிறப்பான பீல்டர் என்று தன்னை நிரூபித்தார்.

மற்றொரு முகம், ஜெஸி ரைடர் முரட்டுக் குடிகாரர். 2008ல் போட்டி முடிந்த அன்று நள்ளிரவு 1.30 வரை குடித்துவிட்டு, அதிகாலை 5.30 கழிவறைக் கண்ணாடிக் கதவில் முட்டி கையில் காயமானது.

2009ல் மித மிஞ்சிய குடியால் டீம் மீட்டிங்கிற்கு வரவில்லை. அதனால் அடுத்த ஒருநாள் போட்டியில் ஆடவில்லை. 2014ல் இந்தியா வந்த போது பார்களில் தஞ்சமானார். 2013ல் கிறிஸ்ட்சர்ச் நகரில் ஒரு மதுபான பாருக்கு வெளியே மர்ம நபர்கள் ரைடரைத் தாக்கிச் சென்றனர். அந்தத் தாக்குதலால் கோமா நிலைக்கு சென்று திரும்பினார்.

2013ல் வெஸ்ட் இண்டீஸ்க்கு எதிரான போட்டியில் கோரே ஆண்டர்சன் குறைந்த பந்துகளில் சதமடித்து அப்ரீடியின் சாதனையை முறியடித்தார். அந்தப் போட்டியில் ரைடர் 46 பந்துகளில் சதமடித்தார்.

இந்திய அணிக்கு எதிராக சிறப்பாக ஆடக்கூடியவர் ஜெஸி ரைடர். டெஸ்ட் போட்டிகளில் அவர் அடித்த மூன்று சதங்களும் இந்திய அணிக்கு எதிராக, அதில் ஒன்று இரட்டை சதம். ஒருநாள் போட்டியிலும் இந்திய அணிக்கு எதிராக சதமடித்துள்ளார். சிறந்த பந்துவீச்சும் இந்திய அணிக்கு எதிரான போட்டியில் தான்.

நடுவில் அயர்லாந்து அணிக்காக ஒப்பந்தம் ஆகியிருந்தார். ஜெஸி ரைடர் முரட்டு குடிகாரர் என்றாலும் அவரது ஆட்டத்தில் ஒரு நேர்த்தி உண்டு.

இந்த மாத போட்டிகள்				
தேதி	ஆடும் அணிகள்		மைதானம்	போட்டி
பிப்ரவரி 2	இந்தியா	இங்கிலாந்து	மும்பை	டி20
பிப்ரவரி 6 - 10	*இலங்கை*	*ஆஸ்திரேலியா*	*காலி*	*டெஸ்ட்*
பிப்ரவரி 6 - 10	*ஜிம்பாப்வே*	*அயர்லாந்து*	*புலவாயோ*	*டெஸ்ட்*
p	இந்தியா	இங்கிலாந்து	நாக்பூர்	ஒருநாள்
பிப்ரவரி 8	நமீபியா	அமெரிக்கா	அல் அமீரட்	ஒருநாள்
பிப்ரவரி 8	பாகிஸ்தான்	நியூஸிலாந்து	முல்தான்	ஒருநாள்
பிப்ரவரி 9	இந்தியா	இங்கிலாந்து	கட்டாக்	ஒருநாள்
பிப்ரவரி 10	ஓமன்	நமீபியா	அல் அமீரட்	ஒருநாள்
பிப்ரவரி 10	நியூஸிலாந்து	தென் ஆப்பிரிக்கா	முல்தான்	ஒருநாள்
பிப்ரவரி 12	இலங்கை	ஆஸ்திரேலியா	கொழும்பு	ஒருநாள்
பிப்ரவரி 12	ஓமன்	அமெரிக்கா	அல் அமீரட்	ஒருநாள்
பிப்ரவரி 12	இந்தியா	இங்கிலாந்து	அகமதாபாத்	ஒருநாள்
பிப்ரவரி 12	பாகிஸ்தான்	தென் ஆப்பிரிக்கா	முல்தான்	ஒருநாள்
பிப்ரவரி 14	இலங்கை	ஆஸ்திரேலியா	கொழும்பு	ஒருநாள்
பிப்ரவரி 14	நமீபியா	அமெரிக்கா	அல் அமீரட்	ஒருநாள்
பிப்ரவரி 14	இறுதிப்போட்டி - முத்தரப்பு		முல்தான்	ஒருநாள்
பிப்ரவரி 14	ஜிம்பாப்வே	அயர்லாந்து	ஹராரே	ஒருநாள்

இந்த மாத போட்டிகள்				
தேதி	ஆடும் அணிகள்		மைதானம்	போட்டி
பிப்ரவரி 16	ஓமன்	நமீபியா	அல் அமீரட்	ஒருநாள்
பிப்ரவரி 16	ஜிம்பாப்வே	அயர்லாந்து	ஹராரே	ஒருநாள்
பிப்ரவரி 18	ஓமன்	அமெரிக்கா	அல் அமீரட்	ஒருநாள்
பிப்ரவரி 18	ஜிம்பாப்வே	அயர்லாந்து	ஹராரே	ஒருநாள்
பிப்ரவரி 19	பாகிஸ்தான்	நியூஸிலாந்து	கராச்சி	ஒருநாள்
பிப்ரவரி 20	பங்களாதேஷ்	இந்தியா	துபாய்	ஒருநாள்
பிப்ரவரி 21	ஆப்கானிஸ்தான்	தென் ஆப்பிரிக்கா	கராச்சி	ஒருநாள்
பிப்ரவரி 22	ஆஸ்திரேலியா	இங்கிலாந்து	லாகூர்	ஒருநாள்
பிப்ரவரி 22	ஜிம்பாப்வே	அயர்லாந்து	ஹராரே	டி20
பிப்ரவரி 23	பாகிஸ்தான்	இந்தியா	துபாய்	ஒருநாள்
பிப்ரவரி 23	ஜிம்பாப்வே	அயர்லாந்து	ஹராரே	டி20
பிப்ரவரி 24	பங்களாதேஷ்	நியூஸிலாந்து	ராவல்பிண்டி	ஒருநாள்
பிப்ரவரி 25	ஆஸ்திரேலியா	தென் ஆப்பிரிக்கா	ராவல்பிண்டி	ஒருநாள்
பிப்ரவரி 25	ஜிம்பாப்வே	அயர்லாந்து	ஹராரே	டி20
பிப்ரவரி 26	ஆப்கானிஸ்தான்	இங்கிலாந்து	லாகூர்	ஒருநாள்
பிப்ரவரி 27	பாகிஸ்தான்	பங்களாதேஷ்	ராவல்பிண்டி	ஒருநாள்
பிப்ரவரி 28	ஆப்கானிஸ்தான்	ஆஸ்திரேலியா	லாகூர்	ஒருநாள்

சேதுபாலா (@sethubala16) எழுதிய “96 வெண்பா” புத்தகம் www.commonfolks.in தளத்தில் கிடைக்கிறது.

துடுப்பாட்டம் ரசிகர்களுக்கு சிறப்பு (குறைந்த) விலையில் ரோஜா மார்க் நெய், மதுரை, விருதுநகர், தேனி, ராம்நாட் , சிவகங்கை மக்கள் தொடர்பு கொள்ளவும்...
80720 13145

பிக் பாஷ் லீக்

ஐ பி எல்-க்குப் பிறகு பெரிய அளவில் பேசப்படும் ஆஸ்திரேலியாவின் பிக்பாஷ் தொடர் டிசம்பர் - ஜனவரியில் நடைபெற்றது.

எஸ்ஏ20, இண்டர்நேஷனல் டி20, பங்களாதேஷ் பிரிமியர் லீக், சூப்பர் ஸ்மாஷ் எனப் பல தொடர்கள் ஒரு நேரத்தில் நடைபெற்றதால் பிரபல வெளிநாட்டு வீரர்கள் பெரிய அளவில் பங்கேற்கவில்லை. இங்கிலாந்து, நியூசிலாந்து வீரர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

இத்தாலி வீரர்கள் பென் மனென்டி மற்றும் ஹாரி மனென்டி சகோதரர்கள் பங்கேற்றனர். சில அமெரிக்க, கனடிய, பாகிஸ்தான் வீரர்களும் பங்கேற்றனர்.

ஷார்ட்டின் சதம்

ஜனவரி 11 ல் நடைபெற்ற போட்டியில் அடிலெய்டு ஸ்ட்ரைக்கர்ஸ் அணி கேப்டன் மேத்யூ ஷார்ட் சதமடித்தார். 54 பந்துகளில் 109 ரன்கள் அடித்ததால் அணி ஸ்கோர் 251 வந்தது. இந்தத் தொடரில் அதிகபட்ச ரன் இது தான்.

கடைசிப் பந்தில் சிக்ஸர்

ஜனவரி 16ல் நடைபெற்ற போட்டியில் லபுசேன் 77 ரன்கள் அடிக்க பிரிஸ்பேன் ஹீட் அணி 6 விக்கெட் இழப்பிற்கு 201 ரன்கள் எடுத்தது. சேஸ் செய்த ஹோபர்ட் ஹரிக்கேன்ஸ் அணிக்குக் கடைசி ஓவரில் 11 ரன்கள் தேவைப்பட்டது. கடைசிப் பந்தில் சிக்ஸ் அடித்து அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தார் மேத்யூ வேட். கலேப் ஜீவல் 76 ரன்கள் எடுத்தார்.

சுருண்ட ஹோபர்ட் ஹரிக்கேன்ஸ்

டிசம்பர் 19ல் நடைபெற்ற போட்டியில் ஹோபர்ட் ஹரிக்கேன்ஸ் அணி 74 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. கேப்டன் நாதன் எல்லிஸ் அதிகபட்சமாக 35 ரன்கள் எடுத்தார்.மெல்போர்ன் ரினேகேட்ஸ் அணி சார்பில் பெர்குஸ் ஓ நெய்ல், டாம் ரோஜர்ஸ், வில் சதர்லேண்ட் தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

எட்டு ரன்னில் தோற்ற ரினேகேட்ஸ்

டிசம்பர் 30ல் நடைபெற்ற போட்டியில் சிட்னி தண்டர் அணி கேப்டன் வார்னர் (86*) அரைசதத்தால் 156 ரன்கள் எடுத்தது. சேஸ் செய்த மெல்போர்ன் ரினேகேட்ஸ் அணிக்கு கடைசி இரண்டு ஓவர்களில் 27 ரன்கள் தேவைப்பட்டன. 19வது ஓவரை வீசிய லாக்கி பெர்குசன் 5 ரன்கள் மட்டுமே கொடுத்தார்.கடைசி ஓவரில் 22 ரன்கள் தேவைப்பட மெல்போர்ன் ரினேகேட்ஸ் அணி 13 ரன்கள் மட்டுமே எடுத்து 8 ரன்கள் வித்தியாசத்தில் தோற்றது. தண்டர் அணியின் வெஸ் அகர் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

குவாலிபயர் - ஜனவரி 21 - ஹோபர்ட்

ஹோபர்ட் ஹரிக்கேன்ஸ் - 173/7

பென் மெக்டெர்மார்ட் -42

ஜாபர் சோகன் - 2/28

சிட்னி சிக்ஸர்ஸ் - 161/5

ஜோர்டன் சில்க் - 57

கேமரூன் கண்ணான் - 2/10

ஹோபர்ட் ஹரிக்கேன்ஸ் 12 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி

ஆட்டநாயகன் ரெய்லி மெரிடித் - 2/34

நாக் அவுட் - ஜனவரி 22 - சிட்னி

சிட்னி தண்டர் - 135/7

ஆலிவர் டேவிஸ் - 36

டாம் கர்ரன் - 2/26

உசாமா மிர் - 2/26

மெல்போர்ன் ஸ்டார்ஸ் - 114

க்ளென் மேக்ஸ்வெல் - 28

நாதன் ஆண்ட்ரு - 5/16

சிட்னி தண்டர் 21 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி

ஆட்டநாயகன் - நாதன் ஆண்ட்ரு - 5/16

சேலஞ்சர் - ஜனவரி 24- சிட்னி

சிட்னி சிக்ஸர்ஸ் - 151/7

ஜோர்டன் சில்க் - 43*

டாம் ஆண்ட்ரூஸ் - 2/15

சிட்னி தண்டர் - 157/6

சாம் பில்லிங்ஸ் - 42*

ஹேடன் கெர் - 2/36

சிட்னி தண்டர் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி

ஆட்டநாயகன் - சாம் பில்லிங்ஸ் - 42*

இறுதிப் போட்டி - ஜனவரி 27 - ஹோபர்ட்

சிட்னி தண்டர் - 182/7

ஜேசன் சங்கா -67

நாதன் எல்லிஸ் - 3/23

ஹோபர்ட் ஹரிக்கேன்ஸ் - 185/3

மிட்செல் ஓவன் - 108

தன்வீர் சங்கா -2/43

ஹோபர்ட் ஹரிக்கேன்ஸ் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி

ஆட்டநாயகன் - மிட்செல் ஓவன் – 108

அதிக ரன்கள் அடித்த வீரர்கள்

மிட்செல் ஓவன் - 452

டேவிட் வார்னர் - 405

கூப்பர் கொண்ணோலி - 351

க்ளென் மேக்ஸ்வெல் - 325

மார்க்கஸ் ஸ்டோய்னிஸ் - 311

அதிக விக்கெட் எடுத்த வீரர்கள்

ஜேஸன் பெகன்டிராப் - 17

டாம் ரோஜர்ஸ் - 16

ரெய்லி மெரிடித் - 16

மார்க் ஸ்டீகெட்டீ - 15

லான்ஸ் மோரிஸ் - 15

மைல் கல்லை எட்டியவர்கள்

50	ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்காட் போலன்ட் டெஸ்ட் போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	
	தென்னாப்பிரிக்க அணியின் விக்கெட் கீப்பர் கைல் வெறின்னே டெஸ்ட் போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	1000
1000	இந்திய அணியின் ஜெமீமா ரோட்ரிக்ஸ் ஒருநாள் போட்டிகளில் 1000 ரன்களைக் கடந்தார்.	
	பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சஜித் கான் டெஸ்ட் போட்டிகளில் தனது 50வது விக்கெட்டை வீழ்த்தினார்.	50

மைல் கல்லை எட்டியவர்கள்

10000	டெஸ்ட் போட்டிகளில் 10000 ரன்களைக் கடந்தார் ஸ்டீவ் ஸ்மித். 10000 ரன்களைக் கடந்த 4வது ஆஸ்திரேலியர் இவர்.	

அணி	போட்டிகள்	இன்னிங்ஸ்	மொத்த ரன்கள்	அதிக பட்சம்
பங்களாதேஷ்	2	4	119	58
இங்கிலாந்து	37	66	3417	239
இந்தியா	24	46	2356	192
நியூஸிலாந்து	10	18	808	138
பாகிஸ்தான்	15	25	1175	165*
தென் ஆப்பிரிக்கா	12	21	854	104
இலங்கை	6	10	539	145*
வெஸ்ட் இண்டீஸ்	9	15	872	200*

மொத்த ரன்கள் **10140**

இந்தியா - அயர்லாந்து ஒருநாள் தொடர்

அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டிகளில் ஆடியது. மூன்று போட்டிகளும் ராஜ்கோட்டில் நடைபெற்றன.

ஹர்மன்பிரீட் கவுர் ஓய்வு எடுத்துக் கொள்ள, ஸ்மிருதி மந்தனா கேப்டனாக செயல்பட்டார். முதல் போட்டியில் அயர்லாந்து முதலில் பேட்டிங் செய்து 7 விக்கெட் இழப்பிற்கு 238 ரன்கள் எடுத்தது. கேப்டன் கேபி லூயிஸ் 92 ரன்களும், லே பால் 59 ரன்களும் எடுத்தனர். இந்தியா நான்கு விக்கெட்டுகளை மட்டும் இழந்து எளிதாக வென்றது. பிரதிகா ராவல் 89, தேஜல் ஹஸாப்னிஸ் 53* அரைசதம் அடித்தனர்.

அயர்லாந்து - 238/7

கேபி லூயிஸ் – 92

பிரியா மிஸ்ரா - 2/56

இந்தியா - 241/4

பிரதிகா ராவல் - 89

ஐமீ மகுய்ரே - 3/57

இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி.

ஆட்டநாயகி - பிரதிகா ராவல் - 89

இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்தியா முதலில் பேட்டிங் செய்து 5 விக்கெட் இழப்பிற்கு 370 ரன்களைக் குவித்தது. மந்தனா (73), பிரதிகா (67), ஹர்லீன் தியோல் (89) அரைசதம் அடித்தனர். ஜெமீமா 102 சதம் அடித்தார்.

சேஸ் செய்த அயர்லாந்து அணியின் விக்கெட் கீப்பர் கிறிஸ்டினா 80 ரன்கள் அடிக்க, 7 விக்கெட் இழப்பிற்கு 254 ரன்களே எடுத்தது.

இந்தியா – 370/5

ஜெமீமா – 102

ஓர்லா ப்ரண்டெர்காஸ்ட் 2/75

அயர்லாந்து - 254/7

கிறிஸ்டினா - 80

தீப்தி சர்மா - 3/37

இந்தியா 116 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகி - ஜெமீமா – 102

மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் இந்தியா முதலில் பேட்டிங் செய்தது. துவக்க ஆட்டக்காரர்கள் பிரதிகா (154), மந்தனா (135) சதங்களால் 435 ரன்களைக் குவித்தது. இமாலய இலக்கைத் துரத்திய அயர்லாந்து 131 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

இந்தியா 435/5

பிரதிகா – 154

ஓர்லா ப்ரண்டெர்காஸ்ட் - 2/71

அயர்லாந்து 131

சாரா போர்ப்ஸ் - 41

தீப்தி சர்மா - 3/27

இந்தியா 304 ரன்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆட்டநாயகி - பிரதிகா ராவல் -154

பல சாதனைகள் படைத்த இந்தத் தொடர் வெற்றியின் மூலம் இந்தியா சாம்பியன்ஷிப் புள்ளிப் பட்டியலில் இரண்டாம் இடத்திற்கு வந்தது.

தொடர் நாயகி - பிரதிகா ராவல் 310 ரன்கள்.

ஓய்வு

இந்திய அணியின் முன்னாள் விக்கெட் கீப்பர் விருத்திமான் சகா ஓய்வு பெற்றார். 40 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள சகா 1353 ரன்கள் (3 சதங்கள், 6 அரைசதங்கள்) அடித்துள்ளார். 92 கேட்ச்கள் மற்றும் 12 ஸ்டம்பிங் செய்துள்ளார்.

மகளிர் ஆஷஸ் தொடர்

ஆஷஸ் தொடர் என்றாலே ஆஸ்திரேலியா உக்கிரமாக ஆடும். அதே சமயம் இங்கிலாந்தும் எளிதில் விட்டுவிடுவது இல்லை. மகளிர் ஆஷஸ் பற்றி பார்ப்போமா?

மூன்று ஒருநாள் போட்டிகள், மூன்று டி20 போட்டிகள், ஒரு டெஸ்ட் என அனைத்திலும் வென்று ஆஸ்திரேலியா தனது ஆதிக்கத்தை செலுத்தியது.

முதல் ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து 204 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ஆஸ்திரேலியா கேப்டன் அலிஸா ஹீலி அரைசதம் (70) அடித்தார். ஆஷ்லே கார்டனர் 42* ரன்கள், மூன்று விக்கெட்டுகள், இரண்டு கேட்ச்கள் பிடித்து ஆட்டநாயகி ஆனார்.

இரண்டாவது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியா 180 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. எக்லஸ்டோன் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆஸ்திரேலியா சிறப்பாகப் பந்து வீசி இங்கிலாந்தை 159 ரன்களுக்கு ஆல் அவுட் ஆக்கியது. கிம் கார்த் 3 விக்கெட்டுகளையும், அலனா கிங் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

3வது ஒருநாள் போட்டியில் ஆஸ்திரேலியா 308 ரன்கள் அடித்தது. பெத் மோனி (50), தாகிலா மெக்ராத் (55) அரைசதம் அடித்தனர். ஆஷ்லே கார்டனர் சதம் (102) அடித்தார். இங்கிலாந்து 222 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. டம்மி பியூமோன்ட் (54), நாட் ஷிவர் புருண்ட் (61) ரன்கள் அடித்தனர். ஆஸ்திரேலியா தரப்பில் அலனா கிங் 5 விக்கெட்டுகளையும், மேகன் ஸ்காட் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பெத் மோனி 75 ரன்கள் அடிக்க முதல் டி20 போட்டியில் ஆஸ்திரேலியா 198 ரன்கள் எடுத்தது. ஜார்ஜியா வேர்ஹம் 3, அலனா கிங் 2 விக்கெட்டுகளை எடுக்க இங்கிலாந்து 141 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது.

தாகிலா மெக்ராத் 48* ரன்கள் எடுத்து ஆஸ்திரேலியா அணியின் ஸ்கோரை 185 என ஆக்கினார். இங்கிலாந்து அணி 4 விக்கெட் இழப்பிற்கு 168 ரன்களை மட்டுமே எடுத்துத் தோற்றது. இங்கிலாந்து அணி ஆல் அவுட் ஆகாத ஒரே போட்டி இது தான்.

பெத் மோனி 94 ரன்கள் அடிக்க ஆஸ்திரேலியா 5 விக்கெட் இழப்பிற்கு 162 ரன்களை எடுத்தது. இங்கிலாந்து 90 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. ஜார்ஜியா வேர்ஹம் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா இன்னிங்ஸ் வெற்றி பெற்றது. அலனா கிங் 9 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அனபெல் சதர்லேண்ட் 163 ரன்களும், பெத் மோனி 106 ரன்களும் எடுத்தனர். இங்கிலாந்து அணி சார்பில் எக்லஸ்டோன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

துடுப்பாட்டம்

கிரிக்கெட்டும் கிரிக்கெட் சார்ந்தும்

கடைசிப் பக்கம்

குறிப்பிட்ட தேதியில் வெளியிட முடியாமல் போனால் வாசகர்களின் நன்மதிப்பை இழக்க வேண்டும், தகவல்களும் கிட்டத்தட்ட பழசாகிவிடும் என்பதால் ஜனவரி இதழ் அவசரகதியில் வெளியானது. அதனால் சில தகவல்கள் பிழைகள் இதழில் இடம்பெற்றது அதற்காக வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த இதழும் அவசரகதியில் தான் வெளியாகிறது. முடிந்த அளவு தரவுகள் சரி பார்ப்பு நிகழ்ந்துள்ளது.

ஜனவரியில் குறைவான அளவே சர்வதேசப் போட்டிகள் நடந்தாலும் சுழற்பந்து வீச்சாளர்கள் வருண் சக்ரவர்த்தி, நோமன் அலி முறையே சர்வதேச டி20 மற்றும் டெஸ்ட் போட்டிகளில் 5வது இடத்திற்கு முன்னேறியுள்ளது பாராட்டத்தக்க விசயம்.
இன்னொரு புறம் ரஷீத்கான் டி20 போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய சுழற்பந்து வீச்சாளர் ஆகியுள்ளார்.

சென்ற ஆண்டில் மூன்று ஒருநாள் போட்டிகளில் மட்டுமே ஆடிய இந்திய அணி சாம்பியன்ஸ் டிராபிக்குத் தயாராகி வருகிறது. அழிந்துவரும் ஒருநாள் போட்டிகளுக்கு சாம்பியன்ஸ் டிராபி புத்துயிர் கொடுக்குமா என்று தெரியவில்லை. அதே போல் பாகிஸ்தானில் முத்தரப்பு ஒருநாள் தொடர் நடைபெற உள்ளது.

மீண்டும் சந்திப்போம்.

தொடர்புக்கு +91 8056609320